கண்ணன்

15-4-58

13 ந.பை

592



செய்திகள்

ரஷ்யாவின் புதிய பிரதமர்

இதுவரையில் சோவியத் ரஷ்யாவின் பிரதம மந்திரியாக நிகோலாய் புல்கானின் என்பவர் இருந்தார். சமீபத்தில் அவரோடு சென்னைக்கு வந்திருந்த நிகிதா குருஷ்சேவ் என்பவர் புதிய பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். புல்கானின் ஒரு பாங்கின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பள்ளி ஆண்டு விழா

குமரப்பா செங்குந்தர் துவக்கப் பள்ளியின் ஐந்தாவது ஆண்டு விழா ஈரோடு அரசினர் மருத்துவசாலை கௌரவத் துணை மருத்துவ டாக்டர் திருமதி சேதுபாஸ்கர் தலைமையில் நடைபெற்றது. அரசினர் பெண்கள் உயர்நிலை ஆதாரப் பயிற்சிப் பள்ளித் தலைமை ஆசிரியை ஸ்ரீமதி ஏ. பி. ஜோசப் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

தமிழறிஞர் படத் திறப்பு விழா

தமிழறிஞரும் சைவ சித்தாந்த மகா சமாஜத் தலைவருமாக விளங்கி திரு எம். பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களின் உருவப் படம் பி. எஸ். ஹைஸ்கூலில் திறந்து வைக்கப்பட்டது. அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் தலைமை வகித்தார்.

கம்பன் திருநாள்

காரைக்குடியில் ஆண்டுதோறும் கம்பன் திருநாள் கொண்டாடப் பட்டு வருகிறது. இம்மாதம் மூன்று நாள் நடைபெற்ற விழாவுக்கு, ஸ்ரீ தியாகராச செட்டியார், ஸ்ரீ தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் ஆகியோர் தலைமை வகித்தார்கள். பட்டி மண்டபமும் விவாத அரங்குகளும் நடைபெற்றன.

குழந்தை உள்ளம்

சிறுவருக்குரிய பாடல்கள் கொண்ட தொகுதி ஒன்றை விருதுநகர் மாணவர் கலா நிலையத்தார் வெளியிட்டிருக்கிறார்கள். இந்தப் பாடல் களை நல்லைக் கவி அ. இளங்கோவன் பாடியிருக்கிறார். படங்களோடு பாடல்களை அழகிய முறையில் வெளியிட்டிருக்கிறார்கள். இதன் விலை 20 காசுகள்.

சிறந்த திரைப்படம்

இந்த வருஷத்துச் சிறந்த திரைப்படமாக 'தோ ஆங்கண், பாரா ஹாத்' என்ற ஹிந்திப் படம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இதைத் தயாரித்து எடுத்தவர் பிரபல டைரெக்டர் சாந்தாராம். இதற்கு ராஷ்டிரபதியின் தங்கப் பதக்கமும் ரூ 25000 ரொக்கப் பரிசும் வழங்கப் படும். ஏ. வி. எம். தயாரித்த 'ஹம் பஞ்சி ஏக் டால்கே' என்ற குழந்தைகளுக்கான ஹிந்திப் படத்துக்குப் பிரதம மந்திரியின் தங்கப் பதக்கமும் ரூ 25000 ரொக்கப் பரிசும் வழங்கப்படும்.

மலர் 9 இதழ் 8

15—4—1958

குழந்தைகளே !

கண்ணன் வாசகர்களுக்கு எங்கள் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டில் உங்களுக்கு மேலும் மேலும் வெற்றியும் மகிழ்ச்சியும் ஏற்பட வேண்டுமென்று இதயம் கனிய வாழ்த்துகிறேன்.

விடுமுறையில் நீங்கள் அனைவரும் கலந்துகொள்ளக்கூடிய போட்டி ஒன்றை வெளியிடப் போவதாக முன்பு கூறியிருந்தேன். அதன் விவரங்களை அடுத்த இதழில் எதிர்பாருங்கள்.

கண்ணன் கிளைக் கழகங்கள் பல ஊர்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் பலர் புதிய அங்கத்தினர்களாகச் சேர விரும்புகிறார்கள். போட்டியில் கலந்துகொள்பவர்கள் கண்ணன் கழக அங்கத்தினராகத்தான் இருக்க வேண்டும். இதுவரையில் அங்கத்தினர்களாக இல்லாதவர்கள் சேருவதற்காக அடுத்த சில இதழ்களில் கண்ணன் கூப்பன்கள் வெளியாகும். தொடர்ந்து மூன்று கூப்பன்கள் அனுப்புபவர்களை அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்வோம். போட்டியில் கலந்துகொள்பவர்கள் முதலில் ஒரு கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்பலாம். பாக்கி இரண்டு கூப்பன்களையும் அவ்வப் போது அனுப்பலாம். ஒரே இதழில் வெளியாகும் மூன்று கூப்பன்களை அனுப்பிவிடாதீர்கள். ஏப்ரல் 15, மே-1, மே-15) என்று கூப்பன்கள் தொடர்ச்சியாக இருக்க வேண்டும்.

இந்த இதழில் நெடுங்கதை ஒன்றும் பல சிறு கதைகளும் தொடர் கதைகளும் வெளியாகியிருக்கின்றன. படித்துவிட்டு உங்கள் கருத்தைத் தெரிவியுங்கள்.

—ஆசிரியர்.



கே. கண்ணுசாமி

கண்ணன் தொடர் கதைப் பரிசுப் போட்டியில் இந்த ஆண்டு முதல் பரிசு பெற்றவர் கே. கண்ணுசாமி. இவருடைய தொழில் காப்பியடிப்பதுதான்! அதாவது சப் ரிஜிஸ்டிரார் ஆபீஸில் இவர் ஒரு குமாஸ்தா என்பதைத் தான் சொல்கிறேன். ஆனால் இவர் எழுதும் கதைகள் எல்லாம் இவருடைய சொந்தக் கதைகள். ஆபீஸில் வால்யூம் வால்யூமாகப் பத்திரங்களை எழுதித் தள்ளிவிட்டு, வீட்டுக்கு வந்தால் வால்யூம் வால்யூமாகக் கதைகள் எழுத முடியாமல் களைத்துப் போய் விடுகிறதே என்பதே இவர் கவலை. 'பூஞ்சோலை' என்ற பத்திரிகையில் வம்புத் தம்பி என்ற தொடரை எழுதி வந்த இவர் இன்னும் பல குழந்தைகள் பத்திரிகைகளிலும் எழுதியிருக்கிறார். கண்ணனில் தொடர்ந்து வெளிவர இருக்கும் இவருடைய 'அண்ணனும் தங்கையும்' என்ற கதையைப்பற்றி உங்களுக்கு முன் கூட்டியே ஒரு ரகசியத்தைச் சொல்லிவிடுகிறேன்: அது ஓர் அழகான, அருமையான தொடர் கதை. நீங்கள் படித்த பிறகு சொல்லப் போவதைத்தான் நான் முன்னால் சொல்லுகிறேன். அதுவரையில் இது ரகசியந்தானே!

அம்மா, அம்மா, ஓடி வா!

'சசிதேவன்'

அம்மா, அம்மா, ஓடிவா!
அதிசயத்தைக் காணவா!
பொம்மை வைக்கும் அறையிலே
பூனைக்குட்டி பார்க்க வா!

அஞ்சு பூனைக் குட்டிகள்
அங்கு விளையாடுதே!
குஞ்சுப் பூனைக் குட்டிகள்
கூடி விளையாடுதே!

பட்டுப் போன்ற மேனியை
பக்கத்திலே சென்று நான்
தொட்டுப் பார்க்கத் தோணுதே!
துணைக்கு நீயும் வேணுமே!

அஞ்சு பூனைக்குட்டிக்கும்
அம்மா பூனை காவலாய்
நிற்குது நீ வந்துபார்
நெருங்கத் துணிச்சல் இல்லையே!

தப்பித்துக் கொண்டு எங்கே போவது? செங்குத்தான பாறையிலிருந்து கடலில் விழ வேண்டியதுதான்!
பல்லவ மங்கையின் குறிப்பையறிந்த இளவரசன் அன்று முதல் உணவை விரும்பி உண்ணத் தொடங்கினான். இரவு நேரம் வந்ததும் . . . .
பகல் நேரங்களில் சங்கிலியால் கட்டுண்டவன் போல் இருப்பான்.
வந்தாயா வழிக்கு? ஆட்டுக்குட்டி போல் ஆகி விட்டாயா?
இரவில் . . . .
இந்தக் கற்களைக் குவிப்பதற்கு அந்தக் குழிவிடம் தான் ஏற்றது!

ஒரு மாதம் போல் இடைவிடாமல் முயன்று, கற்கோட்டையின் கடைசிக் கல்லைப் பெயர்க்கும் போது..........
இனி விடுதலை!
சோழ இளவரசனுக்கு என்ன பெரிய ஏமாற்றம்! கீழே பாறையில் மோதும் ஆழ் கடல், மேலே செங்குத்தான பாறை!
அதே சமயத்தில் பல்லவ மங்கை உணவு எடுத்துச் செல்லும் காவலாளியிடம்..............
நீ ஆனாலும் மிகவும் நல்லவன். இன்று உனக்குப் பதிலாக நான் உணவு கொண்டு செல்கிறேன். நான் வரும் வரையில் இங்கே காத்திரு!
கையிலே ஒரு பெரிய தட்டை மூடி எடுத்துக் கொண்டு...

(தொடரும்)

காளிகோட்டை ரகசியம்



11. பேய்ச் சிரிப்பு!

சிறிது நேரம் சென்றது.

''எங்கே, என் தோள் மீது ஏறி நின்று பார், பார்ப்போம்!'' என்று நெடுமாறன், இளையவனின் கைகள் இரண்டையும் பற்றிக் கொண்டான். துடையையும் படிக்கட்டுப் போல் மடக்கி நின்று கொண்டான்.

'ஜண'

அதில் ஒரு காலை வைத்து மிகச் சுலபமாக அடுத்த காலை நெடுமாறன் தோள்மீது வைத்தான் இளமாறன். அவனால் இப்போது சுலபமாகத் திட்டி வாசலைப் பார்க்க முடிந்தது. உள்ளே பார்த்தபோது அவனுக்கு முதலில் சிரிப்புத்தான் வந்தது.

ஏனெனில் அது மடப்பள்ளியை ஒட்டிய உக்கிராண அறை. மடப்பள்ளியில் இருந்த சமையற்காரர்கள் தாம்பாளங்களையும் பாத்திரங்களையும் உருட்டுகிற ஓசைதான் கத்தி கேடயங்களைப் போல ஒலித்து அவர்களை மிரட்டிவிட்டது.

''உக்கிராண அறையில் ஒருவருமில்லை. அதற்கு இன்னொரு வழிகூட இருக்கிறது!'' என்றான் இளமாறன்.

''சரி; கீழே இறங்கு! நான் உள்ளே போகப் போகிறேன். நீ திரும்பிச் சாளரத்துக்குப் போ. நான் வரும் வரையில் இந்த வில் அம்புகளோடு அங்கேயே காத்திரு!'' என்றான் நெடுமாறன். இப்போது அவனிடம் தற்காப்புக்காக ஒரு கட்டாரி மட்டுமே இருந்தது.

இளமாறனுக்கு அவனோடு கூடவே போகவேண்டும் என்று ஆசை. ஆனால் நெடுமாறன் சொல்வதற்கு மாறாக நடந்து கொள்ளலாமா? ஒரே பாய்ச்சலில் நெடுமாறன் திட்டி வாசலை எட்டிப் பிடித்து, மரச்சட்டங்களைப் பெயர்த்து உள்ளே குதிக்கும் வரையில் அங்கேயே நின்று பார்த்துக்கொண் டிருந்தான். பார்க்கப் பார்க்க இளமாறனுக்கு அவனிடத்திலிருந்த மதிப்பும் வியப்பும் அதிகமாயின. நிகரற்ற தைரியமும் வலிமையும் கொண்ட நெடுமாறனைப்போல் தானும் ஒரு நாள் விளங்க வேண்டும் என்று எண்ணமிட்டவாறே படிக்கட்டுக்களின் வழியாகத் திரும்பினான்.

உக்கிராண அறையினுள் குதித்த நெடுமாறன் மரவள்ளிக் கிழங்கு மாவு இருந்த மூட்டையின்மீது உருண்டான். உடலெல்லாம் வேஷம் போட்டதுபோல ஒரே மாவு. வேர்வையில் அந்த மாவு நன்றாக ஒட்டிக்கொண்டு விட்டது. மாவு மனிதனைப் போல அவன் அங்கிருந்த மற்றொரு வாயில் வழியாக வெளியே வர முயன்றான். சமையற்காரர்கள் எல்லாரும் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தார்கள். அவர்கள் யார் கண்ணிலும் அவன் படவில்லை. பட்டிருந்தாலும் அவனுடைய மாவு பூசிய உருவத்தைக் கண்டு அவர்கள் வெருண்டோடி யிருப்பார்கள்!

நெடுமாறன் பல வாயில்களையும் அறைகளையும் கடந்து, விருந்துக் கூடத்துக்கு அருகில் வந்துவிட்டான். அதற்குமேல் போக முடியாதபடி ஒரு தடை ஏற்பட்டுவிட்டது. அந்த அறை வாயிலில் இருந்த சேவகன் கண்களில் அவன் பட்டுவிட்டான். பேயோ, பிசாசோ என்று பயந்த சேவகன் கையிலிருந்த பெரிய விசிறியைக் கீழே போட்டுவிட்டுப் பெரிதாகக் கூச்சலிட முயன்றான். ஆனால் அடுத்த கணம் நெடுமாறன் அவன்மீதே பாய்ந்து அவன் வாயை இறுகப் பொத்தினான். அவனால் சிறிதும் திமிற முடியாதபடி அவனைக் கரகரவென்று மறைவிடமாகப் பார்த்து இழுத்து வந்தான். இலைச் சருகுகளும் கூடைகளும் நிரம்பிய

அந்த அறையைப் பார்த்ததும் நெடுமாறனுக்கு வேறு ஒரு யோசனை வந்தது. அந்தச் சேவகனைக் கீழே தள்ளி அவனுடைய உடுப்புக்களைக் கழற்றினான். இரு கைகளையும் கால்களையும் சேர்த்துப் பின்புறமாக அந்த அறையிலிருந்த கயிற்றால் இறுகக் கட்டினான். அவன் வாயை மூடிக் கூச்சல் போட முடியாதவாறு ஒரு குச்சியை எடுத்து மேலண்ணத்துக்கும் கீழண்ணத்துக்கு மாகக் குறுக்கே வைத்தான். எல்லாம் சில விநாடி நேரங்களுக் குள்ளேயே முடிந்துவிட்டது.

அவனை இப்போது பார்த்தால் அங்கிருப்பவர்களாலேயே அந்நியன் என்று சொல்ல முடியாது. அந்தச் சேவகனைப் போலவே அவன் இப்போது காட்சியளித்தான். மாவு பூசிய உடலை நன்றாகத் துடைத்துக்கொண்டு, கையிலே விசிறியை ஏந்தியவாறு அவன் தைரியமாகவே வெளியில் வந்தான். அவனிட மிருந்த கட்டாரி விசிறியோடு மறைந்து இருந்தது.

காட்டு நாகராசனை மகிழ்விப்பதற்காக ஏற்பாடு செய்யப் பட்டிருந்த நாட்டியத்தை அனைவரும் கண் கொட்டாமல் பார்த்துக்கொண் டிருந்தார்கள். அவன் அந்த மண்டபத்தி னுள்ளே மிகவும் பழக்கமுள்ள சேவகனைப்போல் நுழைந்தான். காட்டு நாகராசன் காட்டுமிராண்டியைப் போல இருப்பான் என்று அவன் முதலில் எண்ணியிருந்தான். ஆனால் அவன் வீரத் தில் சிறந்தவனைப் போலவே கம்பீரமாகத் தோன்றினான். அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த சின்னக் காளி வேங்கையார்தான் புலிக்குப் பக்கத்தில் காட்டுப் பூனை உட்கார்ந்திருப்பதுபோல் காணப்பட்டார். காட்டு நாகராசனுக்கும் அவனுடைய உயிர்த் தோழனான செங்கணனுக்கும் உருவச் சாயல் வெகு தூரம் ஒத்திருப்பதைக் கண்டு, நெடுமாறன் வியப்படைந்தான். அசைப்பில் செங்கணனே ராஜ உடைகள் அணிந்து வந்து உட் கார்ந்திருக்கிறானோ என்றுகூடத் தோன்றியது. ஆனால் செங் கணன் பதினெட்டு வயதுகூட நிரம்பப் பெறாத இளங்காளை. இவனோ நாற்பது நாற்பத்தைந்து வயதுள்ள நடுத்தர மனிதனாக இருந்தான். அப்புறம்தான் அவனுடைய ஐயப்பாடு நீங்கித் தெளிவுண்டாயிற்று.

அவனுக்குத் தன்னுடைய அடுத்த வேலை என்ன என்பது தெரியவில்லை. யாராவது கவனித்தால் விருந்தினர்களுக்கு விசிறுவது போலவும், கவனிக்காவிட்டால் அந்த அரண்மனையின் அமைப்பை ஆராய்வதுமாக நேரத்தைக் கழித்தான். நடுநடுவே கட்டிப்போட்ட சேவகன் இலைச் சருகுக் கூடத்துக்குள்ளிருந்து வந்துவிடுவானோ என்றும் சிறிது யோசனையாக இருந்தது. அதனால் அந்த வாயிலை அடிக்கடி திரும்பிப் பார்த்துக்கொண் டிருந்தான்.

அப்படிக் கவனித்த வேளையில் மடப்பள்ளி அறை உள்ள பக்கத்திலிருந்து பெரிய முரடன் ஒருவன் வெளிப்படுவதை அவன் கண்டான். உடம்பெல்லாம் ஒரே ரோமம் அடர்ந்த அந்த முரட னுடைய தசைகள் முண்டு முண்டாகப் புடைத்திருந்தன. பார்வைக்கு ராட்சதன் போலிருந்த அவனுக்கு விழிகளும் மாட்டு விழிகள்போல் அவ்வளவு பெரியவையாக இருந்தன.

கண்டவர்களை மிரளச் செய்யும் அவனுடைய கைகளிலே ஒரு தட்டும் ஒரு பெரிய சாவியும் இருந்தன.

நெடுமாறனைத் தவிர அவனை வேறு யாரும் கவனிக்கவில்லை. அவன் விருந்துக் கூடத்தை ஒட்டியிருந்த இடைவெளி வழியாகப் பதுங்கிப் பதுங்கி ஒருவர் கண்ணிலும் படாமல் போக முயல்வது தெரிந்தது. மதயானை போலிருந்த அவன் பூனைபோல் பதுங்கிச் செல்வது எத்தனை வேடிக்கை! நெடுமாறனுக்கு அவனைப் பின்தொடர்ந்து செல்லவேண்டும் போலிருந்தது.

அது அவனுக்குப் பெரிய காரியமில்லைதான். ஆனாலும் முரடன் அடிக்கடி திரும்பிப் பார்த்தால் அவனும் அவ்வப் போது தன்னை மறைத்துக்கொள்ள வேண்டியிருந்தது.

கடைசியாகச் சுவர்போல் ஓரிடத்துக்கு வந்ததும் முரடன் தன் கையிலிருந்த சாவியை அங்கேயிருந்த துவாரத்திலிட்டுச் சுழற்றினான். பிறகு தன் பலம் கொண்ட மட்டும் சாவியைப் பிடித்தபடியே இழுத்தான். சுவர் ஒரு பெரிய கதவாக மாறித் திறந்துகொண்டது. முரடன் இருண்டு கிடந்த அந்த இடத்தினுள்ளே நுழைந் தான். சற்றைக்கெல்லாம் அவன் கைப்பந்தம் ஒன்றைக் கொளுத்திக்கொள்வதும் தெரிந்தது.

இதையெல்லாம் கவனித்த நெடுமாறன் விசிறியைக் கீழே போட்டுவிட்டு, கட்டாரியை மட்டும் கையிலே வைத்து மறைத்துக்கொண்டு, அந்த

இருண்ட பாகத்துக்குள்ளே நுழைந்தான். கொஞ்ச தூரம் போனதும் அங்கும் ஒரு படிக்கட்டு இறங்கிச் செல்லவேண்டும். ஆனால் அது தெரியாமல் காலை வைத்த நெடுமாறன் படிக் கட்டுக்களிலே உருளத் தொடங்கினான். அவன் உருண்ட ஓசை அந்த முரடனுக்குக் கேட்டுவிட்டது. அவன் பயங்கரமான குரலில், ''யாரடா அங்கே?'' என்று கர்ஜித்தவாறே பின்னால் திரும்பினான்.

ஓர் இமைப்பொழுது நேரம் தவறியிருந்தால் நெடுமாறன் பாடு அதோகதியாகப் போயிருக்கும். ஆனால் கட்டையைப் போல அந்தச் செங்குத்தான படிக்கட்டுகளில் உருண்ட நெடு மாறன் இருண்ட பகுதி ஒன்றில் போய் விழுந்தான். முரடனின் பார்வை அந்த இடத்தில் விழுவதற்கு இடமேயில்லை. ஏனெனில் அந்த இடத்தில் படிக்கட்டுகள் முடிந்து வழி இரண்டாகப் பிரிந்து சென்றது. முரடன் போன வழி ஒன்று; நெடுமாறன் இடறிப் போய் விழுந்த வழி வேறு. மயிரிழையில்தான் நெடுமாறன் தப்பினான்.

பூனையோ பெருச்சாளியோ என்று முரடன் எண்ணியிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவன் அலட்சியமாகப் போயிருப் பானா? அவன் மேலே நடந்து செல்வது தெரிந்தது. நெடுமாறன் மூச்சையடக்கிக்கொண்டு அங்கேயே பதுங்கியிருந்தான். நடந் தால் காலடியோசைகூடத் தெளிவாகப் பிறருக்குக் கேட்கும் நிச்சப்தம்.

முரடன் பெரிதாகக் கனைப்பது கேட்டது. பிறகு சிங்கம் போல் உறுமுவதும் கேட்டது. அதற்குமேல், ''டேய்! என்னடா செய்யறே?'' என்று யாரையோ அதட்டுவதும், ''இந்தாடா நாயே—இதைத் தின்னுவிட்டுக் கிட!'' என்று கூறுவதும் கேட் டன. அதைத் தொடர்ந்து அவன் தன் கையிலிருந்த தட்டைத் தூக்கி எறிந்த ஓசை காது செவிடுபடுவதுபோல் கேட்டது.

அவ்வளவுதான்; அப்புறம் ஒரே அமைதி. முரடன் திரும்பி வந்தான். படிக்கட்டுகளில் ஏறினான். வந்த வழியே போய், சுவர்க் கதவைப் பூட்டிக்கொண்டு போய்விட்டான்.

நெடுமாறன் நெஞ்சம் இப்போது படபடவென்று அடித்துக் கொண்டது. அவன் மெல்ல அந்த வேறு வழியில் சென்று எட்டிப் பார்த்தபோது, கம்பிகள் போட்ட சிறை ஒன்றும் அதனுள்ளே யாரோ ஒருவனும் இருப்பது தெரிந்தது. அந்தக் கைதியோடு, தானும் இப்போது ஒரு கைதியாக மாட்டிக் கொண்டுவிட்டதை யறிந்து அவன் சிறிது கலங்கினான். அப்படி அவன் தயங்கி நின்ற போது பின்னால் இடி இடிப்பதுபோல் ஒரு சிரிப்புச் சத்தம் வந்தது. சாதாரணமாக ஒரு மனிதன் அப்படிச் சிரித்திருக்க முடியாது. அந்தப் பேய்ச் சிரிப்பில் அவன் உள்ளமே உறைந்து விட்டது போலிருந்தது.

(தொடரும்)



பகல் திருடன்

எ. ந. கணபதி

அப்பா என்னிடம் பத்து ரூபாய் நோட்டுகளில் எட்டும் பாஸ் புத்தகத்தையும் கொடுத்து தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங்கில் போட்டு வரும்படி கூறினர். "ரூபாய் பத்திரம். யாரிடமாவது பறி கொடுத்துவிட்டு வந்து நிற்காதே!" என்று எச்சரிக்கையும் செய்து அனுப்பினர்.

ரூபாய் இருந்த சட்டைப்பையை இடது கையால் இறுக்கிப் பிடித்துக் கொண்டு தபாலாபீசை நோக்கி நடந்துகொண் டிருந்தேன். யாரும் பணத்தைத் தட்டிப் பறித்துவிடக் கூடாதே என்று மனம் பதறிக் கொண்டே யிருந்தது.

அப்போது ஸ்டாலின் மீசையுடன் ஒரு முரட்டு ஆசாமி எதிரில் வந்தார். அவரைப் பார்த்தவுடன் எனக்குச் சந்தேகம் உதித்தது. என்னைப் பார்த்தவுடன் அந்த ஆள் சற்று நின்று உற்றுப் பார்த்தார். என் சந்தேகம் ஊர்ஜிதமாகி விட்டது. நெஞ்சு வேகமாக அடித்தது. கை, இறுக்கமாகச் சட்டைப் பையைப் பற்றியது. வேகமாக ஓடித் தப்பிவிடக் கால்கள் தயாராகின.

அப்போது—

'டபக்' என்று என் கையை எட்டிப் பிடித்தார், அந்த ஸ்டாலின் மீசை. "உன் அப்பா பேரு என்ன?" என்று கர்ணகடோரமான குரலில் கேட்டார்.

"தே....தே...தேவசகாயம்" என்று உளறிக் கொட்டினேன், நான் பயத்தில்.

"அப்படிச் சொல்லு!" என்று கூறிய ஸ்டாலின் மீசை என் பையில் கையைப் போட்டார். அப்போதே நான் நிச்சயம் செய்து விட்டேன், இவன் பகல் கொள்ளைக்காரன்தான் என்று. யாராவது உதவிக்கு வந்து நம்மை இவன் கையிலிருந்து விடுவிக்கமாட்டார்களா என்று ஏக்கத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தேன்! ஆனல்

இவன் கொள்ளைக்காரன் என்பதைப் பிறர் எப்படி அறியமுடியும்? உரக்கக் கத்தி மற்றவர்களை உதவிக்கு அழைக்க எண்ணினேன். ஆனால் பாழாய்ப் போன பீதி வாயை அடைத்துவிட்டது. அதையும்சமாளித்து, கூச்சல் போடுவதற்காக நான் வாயைத் திறந்தேன். அதற்குள் அந்த முரட்டு மனிதர் என் வாயைப் பொத்தி, என்னை அலாக்காகத் தூக்கித் தன் தோள்மீது போட்டுக் கொண்டு நடக்க ஆரம்பித்தார். என் நெஞ்சு ஆயிரமைல் வேகத்தில் அடித்தது. எங்கேயாவது கொண்டு போய் நம்மைக் கொன்றுவிட்டுப் பணத்தையும் கொள்ளை அடித்துப் போவதற்காகத்தான் என்னைத் தூக்கிச் செல்கிருன் என்று நினைத்த நான் மறுகணம் மயக்கமடைந்து விட்டேன்.

மீண்டும் கண் விழித்தபோது என் வீட்டில் கட்டிலில் படுத்திருப்பதை உணர்ந்தேன். வியப்புடன் சுற்று முற்றும் பார்த்தேன். சிறிது தூரத்தில் என் அப்பா, அம்மாவுடன் அந்த முரட்டு மனிதரும் ஏதோ பேசிக்கொண் டிருப்பதைக் கண்டேன்.

''மீனு, உன் பிள்ளை உன்னையே உரித்து வைத்தாற்போல இருக்கிருனே! பார்த்ததுமே உன் பிள்ளையாகத்தான் இருக்குமென்று நினைத்தேன். அப்பா பேரைக் கேட்டதும் என் சந்தேகம் நிவர்த்தியாகி விட்டது. பையில் ரூபாய் நோட்டுக்களுடன் அவன் திருதிருவென்று விழிப்பதைப் பார்த்ததும், வீட்டுக்குத் தெரியாமல் தான் திருட்டுத்தனமாய் ரூபாயை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டானுக்கும் என்று நினைத்து அப்படியே வீட்டுக்குத் தூக்கி வந்தேன். இவன் என்னடான்னு இப்படி மயக்கமாயிட்டானே!'' என்று அந்த ஸ்டாலின் மீசைப் பேர்வழி அம்மாவிடம் சொல்லிக்கொண் டிருந்தார்.

''அண்ணு, நீ அடிக்கடி வந்து போயிருந்தால்தானே அவனுக்குத் தெரியும்? அவன் பிறந்த பின் நீ இப்போதுதானே வந்திருக்கிருய். நீ சின்ன வயசில் வீட்டில் ரூபாயை எடுத்துக் கொண்டு பட்டாளத்திற்கு ஓடினுயே, அந்த ஞாபகம் வந்து விட்டதாக்கும்! என் பிள்ளை ஒன்றும் அவ்வளவு மோசமில்லை. அவன் கால் சட்டைப் பையில் இருந்த பாங்குப் புத்தகத்தைப் பார்த்திருந்தால் நீ அப்படிச் சந்தேகப்பட் டிருக்கமாட்டாய். நீ யாரோ என்று பதறி, குழந்தை மயக்கமாகி விட்டான்'' என்று சொன்னுள் என் அம்மா. அப்போதுதான் எனக்கு விஷயம் விளங்கியது. அம்மா அடிக்கடி சொல்லும் பட்டாளத்து மாமா இவர்தானு என்று எண்ணி, படுக்கையிலிருந்து துள்ளிக் குதித்து, ''போங்கள் மாமா, நான் ஒரேயடியாகப் பயந்தே போயிட்டேன்!'' என்று கூறியபடி அந்த ஸ்டாலின் மீசையைப் பிடித்திழுத்து முறுக்கி விட்டேன்! அப்பாவும் அம்மாவும் சிரிக்க ஆரம்பித்தார்கள்.

உனக்குத் தெரியாத கதை

திருச்சி அண்ணு

"ஒரே ஒரு கதை சொல்லு, தாத்தா!" என்ருள் மாலதி.

அவள் தாத்தாவும் கதை சொல்வதில் பலே பேர்வழி. அலுக்காமல் சளைக்காமல் கதை சொல்லுவார். நடந்த கதை சொல்லுவார்; நடக்காத கதை சொல்லுவார். நடந்ததை நடக்காதது போல விளக்கிக் கூறுவார்; நடக்காததை நடந்தது போலவே கண் காது வைத்துக் கயிறு திரிப்பார்! எப்படி இருந்தபோதிலும், எல்லாக் கதைகளும் வேடிக்கையாக இருக்கும். அதைக் கேட்டு மாலதி ஆனந்தமடைவாள்.

அதே தருணம், மாலதியின் அண்ணன் மணியும் ஓடி வந்து, 'உம்' போட அவர்கள் அருகிலே உட்கார்ந்து கொண்டான்.

"ஒரு புதுக் கதை சொல்லட்டுமா? நீங்கள் இதுவரையிலே கேளாத கதை!" ஆரம்பித்தார் தாத்தா. பொக்கை வாய் குறும்பாகச் சிரித்தது.

"சரி, தாத்தா!" என்ருர்கள் குழந்தைகள் ஆவலோடு.

தாத்தா தமது தொண்டையைக் கனைத்துக்கொண்டு, கதை சொல்ல ஆரம்பித்தார். "ரொம்ப ரொம்ப காலத்துக்கு முன்னுலே ஜோதிபுரி என்னும் தேசத்திலே..!" என்று கூறி வரும்போதே, இடைமறித்தாள் மாலதி.

மாலதி: ஒரே ஒரு ராஜா இருந்தாரா? என்ன தாத்தா?

தாத்தா: அதுதான் இல்லே!

ம: ஒரே ஒரு ராணி இருந்தாள்! அப்படித்தானே?

தா: அதுவும் இல்லே, மணி..! இரண்டு ராணிகள் இருந்தார்கள். மூத்த ராணிக்கு ஒரு பிள்ளை உண்டு. இளைய ராணிக்கு ஒரு பிள்ளை.

ஒரு நாள், மூத்த ராணியின் மகன் ராஜாவின் மடியிலே உட்கார்ந்திருப்பதைக் கண்டாள் இளைய ராணி. பொறுக்க முடியவில்லே அவளுக்கு. அவனைப் பிடித்துக் கீழே இறக்கிவிட்டு, தன் பிள்ளையை உட்கார வைத்தாள். ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்த பிள்ளையை நோக்கி, அந்தப் பொருமைக்காரி சொன்னுள். "அடே, ராஜாவின் மடியிலே உட்கார, உனக்கு அதிகாரம் இல்லே. அதற்கு நீ என் வயிற்றிலே பிறந்திருக்க வேண்டும்!" என்று அதட்டினுள். பையன் கண்ணீர் வடித்துக்கொண்டே, ராஜாவின் முகத்தைப் பார்த்தான். அரசனும் அதைக் கவனித்தான். ஆனுல் வாய் திறக்கவில்லே. இளைய ராணி ஒரு வாயாடி. அவளுடைய வாய்க்குப் பயந்து சும்மா இருந்தான்.

மா: என்ன தாத்தா, துருவன் கதைதானே இது?

தா: இல்லே, மாலதி. கேட்டுப் பார்!.. பிள்ளைகள் வளர்ந்து, பெரியவர்களானுர்கள். மூத்த பிள்ளைக்குப் பட்டாபிஷேகம் செய்து வைக்க, எல்லா ஏற்பாடுகளும் செய்தான் அரசன். இதை அறிந்தாள் இளையராணி. அவளுக்கு வந்ததே ஆவேசம்! "என் பிள்ளைக்குத்தான் பட்டம் கட்ட வேண்டும். மூத்த பிள்ளை 14 வருஷம் காட்டுக்குப் போகவேண்டும்!" என்று இளையராணி படபடப்பாகக் கூறினுள். அவளது இடிகுரல் கேட்டு, அரண்மனையே கிடுகிடுத்தது.

ம: ராமாயணம் படிக்கிருர் எங்க தாத்தா! அப்படித்தானே தாத்தா?

தா: இல்லேடா மணி. கதையைக் கவனி!..அந்தச் சமயத்திலே, மந்திரி உள்ளே வந்தார். "மூத்த பிள்ளைதான் பட்டத்துக்கு உரிய

வன்'' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினர். அதோடு நிற்கவில்லை அவர். மக்களைத் தட்டி எழுப்பினர். எங்கும் கூக்குரல்! ஒரே குழப்பம்! மூத்த மகன் சிம்மாசனம் ஏறிய பின்னரே, அந்தக் கூக்குரல் அடங்கிற்று. குழப்பம் தெளிந்தது.

ஆனல் இளையராணியின் மகன் என்ன செய்தான்? அவனுக்குச் சினம் பொங்கி வந்தது. தன் மாமனை அழைத்து யோசனை கேட்டான்.

மூத்த பிள்ளைக்குச் சூதாட்டத்

ராஜ்யத்தைத் திருப்பித் தருவது பற்றி யோசிக்கப்படும்!'' என்றுன் தம்பி.

மா: மகாபாரதக் கதை மாதிரி போகிறதே தாத்தா!

தா: இல்லை மாலதி. கவனி!.. மூத்தவன் காட்டுக்குக் கிளம்பினன். அப்பொழுது அவனது ராணி ஓடி வந்து, ''என்னையும் கூடவே அழைத்துப் போங்கள் நாதா!'' என்று அடம் பிடித்தாள்.

ம: ராமாயணம் டோய்!

தா: எலெ! ராமாயணம் இல்லேடா! கூச்சல் போடாமல்

திலே கிறுக்கு. தன் மாமன் கூறிய யோசனையின் பேரில், அண்ணனைச் சூதாட அழைத்தான் தம்பி. மூத்த பிள்ளை வந்தான். சூதாட்டம் நடந்தது. மூத்த பிள்ளை ஒரு பக்கம். தம்பியின் மாமன் மறு பக்கம். அந்த ஆட்டத்திலே மூத்த பிள்ளைக்குப் படுதோல்வி. நாடு - நகரம், வீடு - வாசல் எல்லாம் இழந்தான்.

''தோற்றவர் 12 வருடங்கள் வனவாசம் செல்லவேண்டும்' பின்னர் ஒரு வருடம் யாரும் அறியாவண்ணம், அஞ்ஞாதவாசம் இருக்கவேண்டும். அதன் பின்னரே

கேளுடா!..மூத்த மகனும் அவன் மனைவியும் காட்டுக்குப் போனர்கள். அங்கே அலைந்து திரிந்தார்கள். காய் கனிகளைத் தின்று, கட்டாந்தரையிலே படுத்து நித்திரை செய்தார்கள்.

வருஷங்கள் உருண்டன!

ஒரு நாள். அரசுகுமாரனுக்கு ஒரே தாகம். அருகில் உள்ள குட்டையிலே தண்ணீர் அருந்தினன். என்ன ஆச்சரியம்! அப்படியே சுருண்டு விழுந்தான். பேச்சு மூச்சு இல்லை! ராணி பதறிப்போய், 'ஹோ' வென்று அலறி விழுந்து மூர்ச்சையானள்.

பின்னர் மூர்ச்சை தெளிந்து பார்க்கும்போது, எமதர்மனைக் கண்டாள். ராஜாவின் உயிர் அவன் கையிலிருப்பதையும் கண்டாள். ''ஐயோ! நான் எப்படித் தனித்திருப்பேன்? என்னையும் அழைத்துப் போங்களேன்!'' என்று அலறிக்கொண்டே எமனைப் பின்தொடர்ந்து சென்றாள்.

மா: பலே தாத்தா! சாவித்திரி சத்தியவான் கதைக்கு வந்திட்டிங்களே!

தா: இல்லே மாலதி. கவனி, கதையை!..ராணியின் உயிரைக் கொண்டு போக, எமனுக்கு அதிகாரம் கிடையாது. ஆனால் அவளோ பிடிவாதமாகப் பின்தொடர்ந்தாள் எமனுக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. அந்தக் குழப்பத்தில் அவன் கையிலிருந்த உயிர் தப்பி ஓட்டம் பிடித்தது!

அதைக்கண்ட ராணியும் ஓட்டம் பிடித்தாள்!

அங்கே குட்டைக் கரையிலே தூங்கி விழித்தவன்போல, ராஜா எழுந்து உட்கார்ந்தான். ராணியும் ஓடோடி வந்து, அருகே அமர்ந்து கொண்டாள்.

இம்மாதிரிப் பல துன்பங்களை அநுபவித்து, அந்த ராஜாவும் ராணியும் பன்னிரண்டு வருடங்களை உருட்டினார்கள். இன்னும் ஒரு வருடம் யாருக்கும் தெரியாமல் வசிக்கவேண்டுமே. என்ன செய்வது? வெகு சிரமப்பட்டு மாறுவேடம் தாங்கி, தேசம் தேசமாகச் சஞ்சாரம் செய்து வந்தான்.

ஒரு பாடாக அஞ்ஞாதவாசம் முடிந்தது! அரசன் தன் தம்பியிடம் தூது அனுப்பினான். ஆனால் தம்பியோ முன் வாக்களித்தபடி ராஜ்யத்தைத் தர மறுத்துவிட்டதுமல்லாமல், தூதுவனையும் அவமானப்படுத்தி அனுப்பினான். அது மட்டுமா? நாடெங்கும் பறை முழங்கச் செய்தான். 'அண்ணன் தலைதனைக் கொய்து வருவோருக்கு ஆயிரம் பொற்காசு வழங்கப்படும்' என்று பறை முழங்கியது.

ஓர் ஏழைப் புலவர்! ஆயிரம் பொற்காசுக்கு ஆசைப்பட்டுக் கிளம்பினார். அந்தக் காடு முழுதும் சல்லடை போட்டுச் சலித்து, கடைசியில் அரசனைச் சந்தித்தார். ''வேந்தே! ஆயிரம் ஆயிரம் பொற்காசு கொடு, அல்லது உன் தலையைக் கொடு. நான் பரம ஏழை!'' என்று அழுது புலம்பினார். அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அரசனுக்கு மனம் இளகிப் போயிற்று. அவன் சொன்னான், ''அந்த நாள் வந்திலை, அருந்தவ முனிவனே!''

மா: கடைசியிலே தாத்தா, இது குமணன் கதைதானே?

தா: எலே! யாருடா அப்படிச் சொன்னது? கேளுடா!..''அன்பரே, நான் அரசனாக இருந்த அந்த நாள் வந்திலை. ஆயினும் கலங்கவேண்டாம். என் தலை

''ஏண்டா தம்பி! இப்படி அப்பா அம்மாவுக்குத் தெரியாமல் கிளம்பி வரலாமா?''

''பக்கத்து வீட்டு அம்பி சொன்னான், இந்த மாதிரி வழி தெரியாமெ வர பசங்களுக்குப் போலீஸ்காரங்க பிஸ்கட் வாங்கிக் கொடுத்து வீட்டுலே கொண்டு வந்து விடுவாங்கன்னு....''

மட்டுமென்ன? நானே தலையோடு வருகிறேன். வந்து என் தம்பியிடம் பொற்காசு வாங்கித் தருவேன். தம்பி தன் வாக்குத் தவறாதிருக்க, நானே உமக்குத் துணை செய்கிறேன், வாருங்கள்!'' என்று கூறி, மன்னன் அந்தப் புலவர் பின்தொடர்ந்து ஓடி வர, ஜோதிபுரியை நோக்கி வேகமாக நடந்தான். அரண்மனையிலே தம்பியைக் காணோம். மந்திரியே வரவேற்றான்.

மன்னன் கூறுவான். ''மந்திரி, நான் இரவும் பகலும் யோசித்தேன். எனக்குக் காட்டு வாழ்க்கை சகஜமாகிவிட்டது. ஆனால் என் தம்பியோ காட்டு வாழ்வைக் கண்டறியாதவன். நான் அரசனாகிவிட்டால், அவன் காட்டுக்குப் போகும்படி நேரிடுமல்லவா? அது வேண்டாம். அவனே அரசனாக இருக்கட்டும்! இன்னொரு வேண்டுகோள். இதோ இவர் ஏழைப் புலவர்! இவருக்கு ஆயிரம் பொற்காசு வழங்கும்படி என் தம்பியிடம் கூறிவிடுங்கள். நான் வருகிறேன்'' என்று திரும்பி நடக்கலானான் அரசன்.

காட்டுக்குத் திரும்பிய மன்னனை மறுத்து, மந்திரி சொல்வான்: ''அரசே, தாங்கள் ஓடோடியும் வருவதை ஒற்றர் மூலமாக அறிந்தார் உங்கள் தம்பி. சண்டைக்குத்தான் வருகிறீர்கள் என்று பயந்து, காட்டுக்கு ஓடிவிட்டார்.'' இவ்விதம் மந்திரி அரண்மனையில் நடந்ததை எல்லாம் விவரமாகக் கூறி முடித்தார்.

அதே சமயம், ஒரு சேவகன் ஓடி வந்து, ''மந்திரி எசமான், நம் ராசாவை ஒரு புலி கொன்னுட்டுது. என் கண்ணாலே பார்த்தேன். கூடவே ஓடின ஆட்களிலே, நான் ஒருவன்'' என்று கூறியபடி, கண்ணீர் விட்டான்.

''தம்பியின் கதை முடிந்தது. இனி நீங்களே அரசர்!'' என்றார் மந்திரி உற்சாகமாக. ''சரி'' என்றார் அரசர். இந்தச் சந்தோஷம் தாங்காமல் புலவர் தமக்குப் பரிசு வேண்டாம் என்று மறுத்துவிட்டார்.

வெகு நாட்களாக மறந்துவிட்ட பரம்பரைச் சிம்மாசனம் தூசு படிந்து, ஒரு மூலையிலே கிடந்தது. உடனே புதுப்பிக்கப்பட்டது பரம்பரை சிம்மாசனம்.

ஒரு சுபயோக சுப தினத்திலே, அரசன் சிங்காதனம் ஏற, முதல் படியிலே காலை வைத்தானோ இல்லையோ, என்ன ஆச்சரியம்! ''அகோ, வாரும் பிள்ளாய், ஜோதிபுரி அரசனே! நான் ஒரு கதை கூறுவேன். அதைக் கேட்டு உன் அபிப்பிராயம் கூறிய பின்னரே, நீ சிங்காதனம் ஏறி உட்

கார முடியும்'' என்றது, படியிலே இருந்த பதுமை.

மா: அகோ வாரும் பிள்ளாய், என் தாத்தாவே! விக்கிரமாதித்தன் கதைதானே?

தா: அகோ, வாரும் பிள்ளாய், மாலதி! அந்தக் கதை இல்லை. கவனி.. அரசன் சிங்காதனத்தை ஏறிட்டுப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! படிமேல் படியாக, கண்ணுக்கு எட்டிய வரையிலே ஒரே பட்டுக்கட்டுகள்! படிகள் கண்டான்; படிகளே கண்டான்! கதை கூறும் பதுமைகளையும் கண்டான். ஒரே யோசனை பளிச்சிட்டது; நல்ல யோசனை அது. ஒரே உற்சாகம் அவனுக்கு! நாட்டு மக்களை எல்லாம் அழைத்தான். அவர்களிடமே ராஜ்ய பரிபாலனத்தை ஒப்படைத்துவிட்டு, சிங்காதனத்திலே படிப் படியாக ஏறி, பதுமைகள் கூறும் கதைகளைக் கேட்பதிலே ஆனந்தமாகப் பொழுது போக்கி வந்தான் ஜோதிபுரி அரசன். நாளொரு புதுமையும் பொழுதொரு கதையுமாகப் பதுமைகள் கூறுவதைக் கேட்டுப் புளகாங்கிதம் அடைந்து வருகிறான் ஜோதிபுரி மன்னன்.

இவ்வாறு தாத்தா கதை கூறும் போது, மாலதிக்குப் 'போதும்' என்றாகிவிட்டது. பதுமை சொல்லும் கதைக்குப் போய்விடுவாரோ இந்தத் தாத்தா என்று உள்ளூறப் பயம் மாலதிக்கு. ''போரும் தாத்தா, எல்லாக் கதையும் இப்பவே தீர்ந்துடப் போறது! இன்னொரு நாளைக்கு ஆகட்டும்'' என்று கூறிக்கொண்டே கைதட்டினாள். மணியையும் கைதட்டச் சொன்னாள். மணியும் கைதட்டி ஆர்ப்பரித்தான்.

''எல்லாம் பழைய கதைதானே தாத்தா?'' என்று மெள்ள ஆரம்பித்தான் மணி. தாத்தா இடைமறித்துச் சொன்னார்.

''அப்படி இல்லேடா மணி! எல்லாம் கதை ஊற்றுக்கள். இதிலிருந்து சொம்பு சொம்பாக மொண்டவர் உண்டு. குடம் குடமாகக் கொண்டு போனவரும் உண்டு. அதிருக்கட்டும். நான் சொன்ன கதை எப்படி?''

''தாத்தா சொன்ன கதை அப்படியே புதுக் கதைதான்! சந்தேகம் என்ன? இதுவரையிலே இப்படி ஒரு கதை வந்ததே இல்லே'' என்று கூறி, கண்ணைச் சிமிட்டிக்கொண்டே, வாசலை நோக்கி ஓடினாள் மாலதி. பின்தொடர்ந்தான் மணி.

மறு பக்கமாக உள்ளே பாட்டி வந்தாள். ''புதுக் கதை சொன்னதிலே தொண்டை வறண்டு போயிருக்கும். பாவம், காபி சாப்பிடுங்கோ!'' என்று கூறி, காபி டம்ளரை தாத்தாவிடம் கொடுத்துவிட்டுச் சிரித்தாள் பாட்டி.



''ஏண்டா, சினிமாவுக்குப் போகக் காசு வேணும்னு கேக்கிறியே! காசு கிடைக்கிறது எவ்வளவு கஷ்டம்னு தெரியுமா உனக்கு!''

''என்ன அப்பா, இது! ஒவ்வொரு சினிமாவுக்கும் காசுக்காக உன்னிடம் எவ்வளவு நேரம் மன்றாடுகிறேன்! எனக்குத் தெரியாமலா இருக்கும்!''

காலில்விழாத குறையாக
நண்பனிடம், கெஞ்சி!
புத்தகத்தை இரவல்
வாங்கி!
1
விடிய! விடிய!! மண்டையை
உடைத்துக்கொண்டு!
பரீக்ஷைக்குப் படித்து!
2
எதிர்பார்த்த! கேள்விகள்
ஒன்றும், பரீக்ஷையில்
வராமல் போகவே!!!!!
3
உபாத்தியாயருக்கு!
சீர் வரிசைகள் செய்து!
(பரீக்ஷையில் தேற !!!)
4
காப்பி அடிக்கும் கலை
பரீக்ஷை சமயத்தில்
பையன் வேண்டுவது!
பரீக்ஷையோ..
கயிறுக்கடை
பரீக்ஷை ரிசல்டை முன்னிட்டு ஒரு வாரம் விடுமுறை.
இவ்வளவு பிரயாசையும்
அவதியும் இதற்குத்தானா!!!!!
பெயில்!
100
5

பரீக்ஷைக்கு முன்,
பரீக்ஷை வருகிறதே
என்ற கவலை!
பரீக்ஷைக்குப்பின்
ரிஸல்ட் வருகிறதே
என்ற கவலை!!
பரீக்ஷைக்கு...
முன்னும், பின்னும்!
பரீக்ஷை!
ஏண்டா!
தாஜ்மகாலே கட்டினது தான்
ஷாஜகான்னு உனக்கு தெரியுமே
நீ ஏன் எழுதலே?
அந்த ராமு!
என்னை காப்பி
அடிச்சான் அவனுக்கு
தெரியவேண்டான்னு
நானும் எழுதலே
ஸார்!!!
டேய்! நான் தான்
முதலில் வந்தேன்
அது என் இடம்!
நீ போடா! இரண்டு
வருஷமா நான்
இங்கே தான்
உக்கார்றேன்!

பழி விலகியது

எஸ். விசுவநாதன்

சரிகை அங்கவஸ்திரம் 'விர்' ரென்று பறக்க, ஆங்கில ஆசிரியர் வகுப்பினுள் நுழைந்தார். வேகமாக வந்ததால், சற்று இளைப்பாறுபவர்போல் நிம்மதியாக நாற்காலியில் சாய்ந்து 'உஸ்' என்று மூச்சு விட்டார். மடிப்புக் கலையாத அந்தச் சரிகை மேல் துண்டை எடுத்து மேசைமேல் வைத்துவிட்டு, வகுப்பை ஒரு பார்வை பார்த்தார்.

''சார்...!'' என்று மெதுவாக அவரை நெருங்கினான் கணேசன்.

''என்ன வேண்டும்?'' என்று மெல்லிய குரலில் கேட்டார் ஆங்கில ஆசிரியர் துரைக்கண்ணு.

வகுப்பில் அங்கொன்றும், இங்கொன்றுமாக 'முசு முசு'ச் சத்தம் பரவிக்கொண்டிருந்தது.

''நேற்றுக் கடைசிப் பீரியடில் திருத்திய விடைத் தாள்கள் எல்லாம் கொடுத்தார்கள் சார். ஆங்கிலத்தில் 'பர்ஸ்ட் பேப்பரி'ல் ஒரு விடையையே திருத்தாமல் விட்டிருக்கிறார்கள். கடைசி இரண்டு பக்கம் 'சம்மரி' சார் அது! இருபது மார்க்குக் கேள்வி சார்!''—தொண்டை அடைத்துக் கொண்ட மாதிரி இருந்தது.

ஆசிரியர் துரைக்கண்ணுவின் விழிகளில் அசைவு இல்லை. கறுத்த புருவங்களை மின்னல் வளைவாகச் சுருக்கிக் கணேசனை நோக்கினார்.

''என்னடா உளறுகிறாய் நீ? ஒரு 'க்வெஸ்சனை'யே—அதுவும் இரண்டு பக்கம் இருக்கும்போது திருத்தாமல் விடுவார்களா? பேப்பரைக் கொடு இப்படி''. கணேசன் விடைத்தாளை நீட்டினான்.

முதல் பக்கத்திலிருந்து உற்று உற்றுப் பார்த்தார். கடைசி இரண்டு பக்கம், மூன்றாம் கேள்வியின் இரண்டாவது பகுதிக்கு விடையான டால்ஸ்டாயின் ஒரு கதைக்குச் சுருக்கம் (சம்மரி).

''ஓகோ, கடைசி விடையா? இந்தத் தடவை ஆங்கிலம் முதல் பேப்பர் எடுத்தவர் 'பிப்த் பாரம்—ஸி' ஆசிரியர்; பக்கத்து வகுப்பில் இருப்பார் இப்போது. போ, அவரைக் கேள்!''

கணேசனுக்கு அந்தச் 'சிடு சிடு' ஆசிரியரைக் காணவே பிடிக்காது; ஆனால் போக வேண்டி வந்தது.

வகுப்பு வாசலில் நின்றான்.

''யாரது, என்ன வேண்டும்? யாரைப் பார்க்க வேண்டும்?'' என்று கேட்டார் அவர்.

அவரிடமும் அதே பல்லவியைப் பாடினான். அவரும் புரட்டிப் பார்த்தார். முதல் தாளின் வலது ஓரத்தில் ரப்பர் ஸ்டாம்பு குத்தப் பட்டிருக்கும் ஆங்கிலத்தில். எண், வகுப்பு, மார்க்கு என மூன்று வரியாக முதல் எடுப்பில் காட்சியளிக்கும்; அங்கேதான் அவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டும். கடைசித் தாளில் பெயர், வகுப்பு, மார்க்கு குறிப்பிடுவதெல்லாம் தான் மலையேறிவிட்டதே!

''டேய்! இது எந்த ஊர் வேலை? என்னை ஏமாற்றிவிட இந்தப் புது முயற்சியோ?'' என்று எட்டிக் கணேசனின் காதைப் பிடித்துக் கொண்டார் அவர். கணேசன் திகைத்துவிட்டான்.

''சார், நீங்கள் என்ன....''

''டேய், வாயை மூடுடா, அயோக்கியப் பயலே! பேப்பர் நேற்றுத்தானே கொடுத்தார்கள்?''

''ஆமாம் சார். நேற்று மாலை கடைசி பீரியட்.''

''ஏன் அப்போதே இதைச் சொல்லவில்லை?''

''அப்போது ஆசிரியர் யாரும் வகுப்புக்கு வரவில்லையென்று விளையாடப் போகச் சொன்னார்கள் சார். அப்படியே பையில் திணித்துக்கொண்டு 'பாஸ்கட்

பால்' விளையாடிக் கொண்டிருந்து விட்டு, பள்ளி விட்டு முக்கால் மணிக்கப் புறம்தான் சார் வீட்டிற்குப் போனேன். அப்புறம்தான் சார் இதைப் பார்த்தேன்!''

''பொய், பொய்!'' என்று கூவிக் கொண்டே, இன்னும் பலமாகக் காதைத் திருகினார் அவர் ஆத்திரத்துடன். தன் தோல்வியில் பிறர் வெற்றி காண விழைந்தால் யாருக்குத்தான் ஆத்திரம் வராது?

''உண்மையாக சார்! நேற்று இரவு கூட ஆசிரியர் வீட்டுக்குப் போய்ச் சொல்லிவிடலாமா என்று பார்த்தேன். பிறகு இப்பொழுதுதான் சார் வகுப்பு ஆசிரியரிடம் காண்பித்துவிட்டு இங்கே வருகிறேன்!'' என்றான் கணேசன்.

''உன்னுடைய புளுகையெல்லாம் கேட்டுச் சகித்துக்கொண்டிருக்க முடியாது! தலைமையாசிரியர் பார்த்துக்கொள்வார் உன்னை? அயோக்கியப் பயலே, நேற்றுக் கொடுத்த பிறகு, அந்தக் கேள்விக்கு விடையை எழுதிக் கடைசியில் இணைத்திருக்கிறாயே, என்ன தைரியம் இருந்தால் இப்படிச் செய்வாய்? ம்....'' என்று உறுமினார்.

கணேசன் ஸ்தம்பித்துப் போனான்; அழுகைகூட வரும் போலிருந்தது.

''சார், அப்படியெல்லாம் ஒன்றும் செய்யவில்லை, சார்!'' என்று கூவிவிட்டான்.

''பின் எப்படியெல்லாம் சார் செய்தீர்கள்?'' என்று கேலிக்குத் தாவினார் அவர்.

அதற்குள், 'சோஷியல் ஸ்டடீஸ்' ஆசிரியர் ஜோசப் ஞானமுத்து தம் பருத்த குட்டையான சரீரத்தை நகர்த்திக் கொண்டு அங்கே வந்துவிட்டார். விஷயம் அறிந்ததும் அவருக்குத்தான் என்ன கோபம், என்ன கோபம்! 'மாரல இன்ஸ்ட்ரக்ஷன்' என்ற நல்லொழுக்க வகுப்பிற்கு, வாரம் ஒரு பீரியட் வந்து வாயெல்லாம் பொய்யாகக் கதையளக்கும் அவருக்கு, கணேசனின் 'பொய்'யைக் கேட்டவுடன் ஒரு பாவ மன்னிப்பே கேட்க வேண்டும் போல் தோன்றியது. கடைசியில் ஒரு கொட்டாவி விட்டுக் கொண்டே நகர்ந்துவிட்டார் அவர்.

கீச் கீச் என்று குரல் கேட்டது. அந்த நபர் திருவாளர் சவரிமுத்து அவர்கள்தாம்! பள்ளியில் பியூன். ஆனால் மாணவர்கள் அவரைத் தலைமையாசிரியரின் அந்தரங்கக் காரியதரி என்றுதான் குறிப்பிடுவார்கள்! அப்படி ஒரு வலது கையாகத் திகழ்பவர். அவர்தான் வகுப்பில் வந்தார். நிலைமையை உணர்ந்து, கணேசனின் பிரஸ்தாப விடைத் தாளை எடுத்துக் கொண்டு, தலைமையாசிரியரின் அறையில் 'சமர்ப்பித்து' விட்டு வந்தார். ''அவர் கூப்பிடும்போது

வரவேண்டுமாம்!'' என்று எச்சரிக்கையும் செய்துவிட்டுப் போனார்.

கணேசனின் உள்ளத்தில் பயப் புயல் வீசியது......

2

அந்த வகுப்பில் சாதாரணமாக, சுமாராகப் படிக்கும் மாணவரில் ஒருவன்தான் கணேசன். நாற்பது-ஐம்பது மார்க்கு வாங்குவதில் ஒன்றும் கஷ்டமில்லை அவனுக்கு. ஆனால் ஆங்கில முதல் பேப்பரில் முப்பத்தெட்டு மார்க்கா? அவனால் இதை நம்ப முடியவில்லை. பேப்பர் தந்ததும், வாங்கிப் பையில் போட்டுக்கொண்டான். 'பாஸ்கெட் பால்' விளையாடிவிட்டு நேரங்கழித்துத்தான் வீட்டிற்குப் போனான். வீட்டில் வேலையெல்லாம் முடிந்த பிறகுதான் விடைத்தாளின் ஞாபகம் வந்தது. எடுத்துப் பார்த்தான். மார்க்குகளைக் கூட்டிப் பார்த்தான். தூக்கி வாரிப்போட்டது. கடைசி 'சம்மரி' திருத்தப்படவுமில்லை, மார்க்கும் போடப்படவில்லை! திரும்பப் பார்த்தான், கூட்டிப் பார்த்தான். தவறான விடை எழுதி விட்டோமோ என்று பயந்தான். எல்லாம் சரியாகத்தான் இருந்தது. 'சம்மரி' பெரிய கேள்வியாயிற்றே, கடைசியில் அதை நிதானமாக, நன்றாக எழுதலாம் என்றுதான் கடைசியில் அதை எழுதினான். இருபது மார்க்குக் கேள்வி! இரவெல்லாம் இதே சிந்தனைதான். கனவிலும் இதே காட்சிகள் நிழலாடின. காலையில் பள்ளிக்குப் புறப்படும் வரை இந்த விஷயமே மன அரங்கில் முற்றுகை யிட்டிருந்தது. பள்ளிக்குப் போனதுமே ஆங்கில ஆசிரியரிடம் காட்டிய பிறகுதான் இப்படியெல்லாம் நிகழ்ந்தது....

3

கணித வகுப்பு நடந்துகொண்டிருந்த போது, சவரிமுத்து வந்தார். தலைமையாசிரியர் கணேசனைக் கூப்பிடுவதாகச் சொன்னார். கணேசன் பரபரப்புடன் தலைமையாசிரியர் அறைக்கு வந்தான். அறையில் ஒரே அமைதி. வலது ஓரமாக உள்ள பெரிய ரேடியோ நீலத் துணியால் மூடப்பட்டிருந்தது. சுவரெங்கும் படங்கள், பின்புறம் அலமாரிகள்.

''குட் மார்னிங் சார்!'' என்றான் கணேசன் பணிவுடன்.

''என்ன சங்கதி? இப்படி ஒரு சிக்கலான விஷயம் பண்ணி வைத்திருக்கிறாயே..ம்.. நேற்றே இதைச் சொல்லியிருக்க வேண்டுமா இல்லையா நீ?''

''நேற்று இரவுதான் சார், நான் அதைக் கவனித்தேன்....''

''சட்! அதெல்லாம் இனி எதற்கு? நீ வீட்டில்தான் இதை எழுதிச் சேர்த்திருக்கிறாய்! இம்மாதிரிக் குற்றங்களையெல்லாம் நான் மன்னிப்பது இல்லை. நீ உன் தகப்பனாரிடமிருந்து ஒரு கடிதம் வாங்கி வரவேண்டும். ஒரு வாரம் வகுப்பறையை விட்டு வெளியே நிற்கவேண்டும்...!''

''சார்..சத்தியமாக நான் அப்படிச் செய்யவில்லை சார்!''

''எப்படிச் செய்யவில்லை? அப்படித்தான் கடைசித்தாள் சேர்த்தாலும் அதில் ஸ்கூல் ரப்பர் ஸ்டாம்ப் எங்கே? 'அடிஷனல் ஷீட்டு'க்கு எல்லாம் வைத்திருக்கும் அந்த முத்திரையின் சுவடே காணோமே!''

''சார்..!'' என்று ஆரம்பித்தவன் தொண்டை அடைக்க நிறுத்திக் கொண்டான். மேலே பேசுவதற்கே தெரியவில்லை.

''போ, போ..நிற்காதே இங்கே...'' என்றார் தலைமை ஆசிரியர்.

''அன்றைக்குப் பரீட்சை ஹாலில் வாங்கிய 'அடிஷனல் ஷீட்டில் எழுதியதுதான் சார் அது! நான் பொய் சொல்லவில்லை, சார்!'' என்று கெஞ்சாத குறையாகச் சொன்னான் கணேசன்.

''மற்ற எல்லா 'அடிஷனல்' தாள்களைப் போல இல்லையே கடைசிக் காகிதம்? மற்றத் தாள்களைவிடக் குட்டையாக அல்லவோ இருக்கிறது! நீ பொய் சொல்லவில்லை என்பதை எப்படி நம்புவது?''

கணேசன் விக்கித்துப் போனுன். மேலுக்கு மேல் எதிர்ப்பா?

"இல்லவே; இல்லே சார்..!"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது! திருட்டுத்தனம். பண்ணிவிட்டு இல்லே யென்கிருயே? அதையெல்லாம் நம்ப நான் என்ன முட்டாளா? ஒரு வாரம் 'ஸஸ்பெண்ட்'- போ." சவரிமுத்துவை மேஜை மணி அழைத்தது.

சவரிமுத்து கணேசனைப் அழைத்துச் சென்று வகுப்புக்கு வெளியே கொண்டு போய் நிறுத்தி விட்டார்.

அப்பொழுது அந்த வகுப்பில் மட்டுமே பரவிய அச் செய்தி, மாலே நாலரை மணிக்குள் பள்ளி முழுவதும் பரவிவிட்டது. முசுமுசுவென்று முணு முணுக்கும் மாணவர்களும், முறைத்துப் பார்க்கும் ஆசிரியர்களும், மூடி மறைத்துப் பேசிக்கொள்ளும் கீழ் வகுப்பு மாணவர்களும் பெருகினர்.

அன்று முழுவதும் கணேசன் வகுப்பறை வாயிலிலேதான் நின்ருன், காவற்காரன் மாதிரி.

கண்ணீரின் மெல்லிய உப்புக் கோடுகள் கன்னத்திலும் முன் கதுப்புக்களிலும் காட்சியளிக்க, கணேசன் நின்றிருந்தான்.

4

இரண்டாம் நாள் மத்தியான்னம், துணிந்து, முதல் பீரியட் துவங்கிய சற்று நேரத்திற்கெல்லாம் தலைமை ஆசிரியரிடம் போனுன் கணேசன், 'கேம்ஸ் பியூன்' கிழவர் வருவதற்கும் சரியாக இருந்தது. கணேசன் அவரை உற்றுப் பார்த்தான். நன்ருகப் பார்த்தான். அவரது முறமுறப்பான கைகள்..ஆ.. அடட...அவனுள் நினைவு அலேகள் மோதின.......

"சார், இவர்தான் சார், அன்றைக்கு 'அடிஷனல் ஷீட்' கொடுத்தது..இவர்தான் சார்.." என்று படபடத்தான் கணேசன்.

கிழவர் கூர்ந்து பார்த்துவிட்டு, "என்ன கணேசு, நான் கொடுத்த காகிதத்துலே நல்லா எழுதினயா? என் கை அதிட்டக் கை..!" என்று சொல்லிச் சிரித்தார்.

தலைமையாசிரியர் இருவரையும் உற்று நோக்கினர்.

"ஆமாம் சார், அன்றைக்குப் பரீட்சையிலே பேப்பர் போதவில்லே என்று இவன் கேட்ட போது நான்தான் எடுத்துக் கொடுத்தேன்."

பரீட்சை ஹாலில் எல்லோருக்கும் குடி தண்ணீர் கொண்டு வந்து தருவது கிழவருடைய வேலே. அப்பொழுது நிகழ்ந்த அந்தச் சம்பவம் இப்பொழுதுதான் கணேசனுக்கும் நினைவு வந்தது.



''இன்னிக்கு 5-ஆம் நெம்பர் பஸ்ஸில் ஏறுவதற்குப் பதில் 10-ஆம் நெம்பர் பஸ்ஸில் ஏறி விட்டேன்.''

''அப்புறம்?''

''அப்புறம் என்ன? பாதித் தூரம் சென்றதும் சட்டென்று கீழே இறங்கிவிட்டேன்!''

''நான் கடைசிப் பேப்பரை வீட்டில் எழுதிச் சேர்த்திருக்கிறேன் என்று குற்றம் சொல்கிறார்கள், தாத்தா!'' என்றான் கணேசன், அடைக்கும் குரலில். லீவுக்குப் பிறகு பள்ளிக்கு இன்று தான் வரும் அவரைப் பார்த்ததும் அவனது நினைவுகள் திரும்பின.

''அன்றைக்குத்தான் பரீட்சை ஹாலுக்கு வந்திருந்த பேப்பர் எல்லாம் தீர்ந்து போய் விட்டதே சார்! அப்புறம் தமிழ்ப் பண்டிதர் சொன்னதன் பேரில், 'டீச்சர்ஸ் ரூமி'லிருந்த கட்டுரை நோட்டு ஒன்றிலிருந்து ஒரு தாள் கிழித்து எடுத்து வரச்சொன்னீர்களே நீங்கள்கூட; அதனால்தான் கொடுத்தேன்!'' என்றார் கிழவர். கணேசனுக்கும் அதெல்லாம் மெல்ல மெல்ல நினைவுக்கு வந்தது.

தலைமையாசிரியருக்கும் கடைசிப் பரீட்சைக்கு முந்திய நாள் நிகழ்ந்த 'காகிதப் பற்றாக் குறை' நினைவுக்கு வந்தது. ரைட்டரைக் கூப்பிட்டுப் புதிதாகப் பேப்பர் வாங்கியது எப்போது என்று பார்க்கச் சொன்னார். சரியாக அன்று மாலை வெள்ளைத்தாள்கள் வாங்கியதற்குக் கடை 'பில்' காட்சி நின்றது!

''மறக்காமல் 'ஸீல்' கூட வைத்தேனே!'' என்றார் கிழவர் ஞாபகமாக.

பிரஸ்தாப விடைத்தாளை மேஜையிலிருந்து அவரே எடுத்துக் கடைசித் தாளைத் தனியே பார்த்து ஓர் இடத்தைக் குறிப்பிட்டு. ''இதோ 'ஸீல்'கூடத் தெரிகிறதே!'' என்றார். அடேயப்பா, என்ன கூரிய கண் பார்வை!

கணேசனுக்கு உயிர் திரும்பிக் கொண்டிருந்தது.

தலைமையாசிரியர் தாளை வாங்கிப் பார்த்தார். தாளின் மேல் வலப்புறத்தில், மிக மிக மெல்லிய வட்டமான 'ரப்பர் ஸ்டாம்ப்'பின் ஓரக் கோடுகள் பட்டையானதும், லேசானதுமாக அடுத்தடுத்து வெளிர் நீலத்தில் தெரிந்தன. கணேசனுடைய இரு நீல மையினால் அடர்த்தியாக எழுதப்பட்ட வரிகளுக்கிடையே அது மறைந்து கொண்டிருந்தது!

அவசரத்தில் எத்தனை பெரிய பழிக்கு ஆளாகி விட்டான் கணேசன்!

தலைமையாசிரியர் கணேசனைப் பார்த்து மெல்லச் சிரித்தார்.

தனக்கு உதவிக் கரம் நீட்டிய கிழவரைப் பார்த்து, கணேசன் புன்னகை புரிந்தான்.

'பிப்த் பாரம் - ஸி' ஆசிரியரும் கண்ணருகே அதைக் கொண்டு போய்ப் பார்த்துவிட்டுத் தவற்றை ஒப்புக்கொண்டு, கவனக் குறைவால் திருத்தாது விட்டிருந்த அந்தச் 'சம்மரி'க்கு, திருத்திப் பன்னிரண்டு மார்க்குக் கொடுத்தார்.

முப்பத்தெட்டு மார்க்கு இருந்த இடத்தில் இப்போது ஐம்பது மார்க்குப் பளீரெனப் பிரகாசித்தது! கணேசனுக்கு இப்போது மார்க்கு அதிகம் கிடைத்ததுகூட ஆச்சரியமில்லை. கிழவரின் உதவியால் பழி விலகியதே!



கைமேல் பலன்

சுப்பாஜி

மகாதேவன் பணக்கார வீட்டுப் பையன். அவனுடைய அப்பா பெரிய உத்தியோகஸ்தர். மகனும் தன்னைப்போலவே நன்றாகப் படித்துப் பெரிய பதவியில் சேரவேண்டுமென்று அவருக்கு ஆசை. ஆனால் மகாதேவன் சுத்த சோம்பேறி. அது மட்டுமல்ல; துஷ்டனும் கூட.

சாதாரணமாகப் படிப்பில் மந்தமாகவும், வகுப்பில் அலட்சியமாகவும் இருந்த மகாதேவன் ஒவ்வொரு தடவையும் பரீட்சையில் மட்டும் தேறி வந்தான். இதனால் அவன் அப்பா அவனை அதிகமாகப் பாராட்டினார். ஆனால் அவன் வகுப்பு உபாத்தியாயர்களுக்கு மட்டும் இது பெரிய ஆச்சரியமாக இருந்தது. கணக்கு வாத்தியார் கங்காதரனுக்கு மட்டும் மகாதேவன்மீது பலமான சந்தேகம் இருந்தது.

''அவன் திருட்டுத்தனமாகத்தான் பரீட்சை எழுதுகிறான். முன்னால் உட்கார்ந்திருப்பவனைப் பார்த்துக் காப்பியடிக்கிறான்'' என்று எண்ணினார் கங்காதரன். அதெப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும்? உண்மை அறிய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தார்.

வருஷக் கடைசியில் முழுப் பரீட்சை வந்தது. முன்னேற்பாடாக இந்தப் பரீட்சையில் சந்துரு என்ற பையனை மகாதேவனுக்கு முன்னால் வெகு அருகில் உட்காரவைத்தார் கங்காதரன்.

சந்துரு மிகவும் கெட்டிக்காரன். நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து மார்க்கு வாங்குவான் எல்லாப் பாடங்களிலும்; குறிப்பாகக் கணக்கில் மட்டும் அவன் எப்போதுமே 'நூற்றுக்கு நூறு'தான். இதற்கு நேர்மாறாக மகாதேவன் கணக்கில் மிகவும் மோசம்.

மகாதேவனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. அன்று பரீட்சையின் கடைசி நாள். வழக்கத்துக்கு விரோதமாகக் கணக்குப் பரீட்சையைக் கடைசியில் வைத்து விட்டார் ஹெட்மாஸ்டர். மகாதேவனுக்குக் கொஞ்சம் பயம் இருந்தது. இன்று தனக்கு முன்னால் சந்துருவைப் பார்த்ததும் பயம் பறந்து விட்டது.

அதுமட்டுமல்ல. கணக்குப் பேப்பரிலே மொத்தம் ஐந்து

கணக்குகள்தான் இருந்தன. முக்கி முக்கிப் போட்டாலும் ஒரு மணி நேரத்துக்குமேல் ஆகாது. சந்துருவோ முப்பது நிமிஷத்தில் போட்டுவிடுவான். கொடுக்கப் பட்ட நேரம் என்னவோ இரண்டு மணி.

மகாதேவன் எதிர்பார்த்தபடி சந்துரு சுமார் முப்பது நிமிஷத்தில் கணக்கை முடித்துவிட்டு, பேப் பரை மடித்துக்கொண்டு வெளியே போய் விட்டான். மகாதேவனும் அதற்குள் தன் வேலையைச் சாமர்த் தியமாக முடித்துக்கொண்டு தனது பேப்பரையும் மடித்துக் கொடுத்து விட்டு வீட்டிற்கு ஓடிவிட்டான்.

நல்ல நாளிலேயே புத்தகத்தைத் தொடாத மகாதேவன் விடுமுறை நாட்கள் முழுவதையும் ஊர்சுற்று வதில் கழித்தான். ஆயிற்று; பள்ளிக்கூடமும் திறந்து விட்டார் கள். பரீட்சை ரிஸல்டும் தெரிந்தது. ரிஸல்டு போர்டைக்கூடக் கவனிக்காமல் அடுத்த வகுப்பிற் குள் நுழைந்த மகாதேவனைப் பார்த்து அவன் நண்பர்கள் சிரித் துக் கேலி செய்தார்கள்.

''டேய், பெரிய புரொபஸர் மாதிரி இந்த கிளாஸுக்கு வந்துட் டாண்டா. போடா, உன்னுடை பழைய வகுப்புக்கே போய் உட் கார்ந்துக்கோ. நீ பரீட்சையிலே 'கோட்' என்பது தெரியாதா?'' என்று கத்தினார்கள் அவர்கள்.

''யாருடா? நானு பெயிலாயிட் டேன்? பல்லை ஓடைச்சுடுவேன்!'' என்று சீறினான் மகாதேவன்.

''முதல்லே போய் லிஸ்டைப் பார்த்துட்டுவா..'' என்றனர் அவனுடைய நண்பர்கள் சிரித்துக் கொண்டே.

நோட்டீஸ் போர்டை நோக்கி அலட்சியமாகப் போன மகா

கரை சேர வேண்டும்

அ. ஹக்கீம்

என் படகு கரை சேர வேண்டும்!
நானோ திசை ஒன்றும் அறிந்திடவில்லை;
செலுத்தும் சக்தியும் என்னிடம் இல்லை;
அதுவோ, பழுதடைந்த படகு;
ஆனாலும், அது கரை சேர வேண்டும்!

எனது விதியின் படகை—
காற்றின் கைகள் தள்ளுகின்றன.
காலத்தின் அலைகள் அழைத்துச் செல்லுகின்றன.
நானோ விரலும் விழியும் இழந்தவன்;
என்றாலும், படகு கரை சேர வேண்டும்!

ஆம். அது கரை சேர வேண்டும்.
படகுக் குடையவன்
கரையில் காத்துக்கொண் டிருக்கிறான்.
படகு கவிழ்ந்து விடக் கூடாது; ஒரு போதும் கூடாது.
எனினும், அது கரை சேர்ந்தே ஆக வேண்டும்!

தேவன் லிஸ்டைப் பார்த்ததும் திகைத்தான். அவன் பெயர் அங்கே இல்லை. ஆனால் அவன் யாரைப் பார்த்துக் காப்பி அடித்தானே அவன் மட்டும் தேறியிருந்தான்.

ஹெட்மாஸ்டர் அறைக்குள் போய் மார்க்குகளைப் பார்த்தான். கணக்கில் ''மகாதேவன்—0'' என்றிருந்தது, அப்படியானல் சந்துரு எப்படிப் பாஸானன்? ''சந்துரு—100'' என்றிருக்கிறதே!

விடுவிடென்று வீட்டிற்கு வந்து அப்பாவையும் அழைத்துக் கொண்டு பள்ளிக்கூடத்துக்கு வந்தான்.

மகாதேவனின் அப்பா ஹெட்மாஸ்டரைக் கேட்டார்: ''என் மகனும் சந்துருவும் பரீட்சை முடிந்த பிறகு பேசிக் கொண்டார்களாம். சந்துருவும் மகாதேவனைப் போலவே கணக்கின் விடைகளை எழுதியதாகச் சொன்னனும். அந்த இரண்டு பையன்களின் விடைத்தாள்களையும் நான் பார்க்கலாமா?''

ஹெட்மாஸ்டர் மகாதேவன் பேப்பரையும், சந்துருவின் பேப்பரையும் எடுத்து அவரிடம் கொடுத்தார்.

சந்துருவின் கணக்கெல்லாம் சரியாக இருந்தன. மகாதேவன் கணக்குப் பூராவும் தப்பு! அவருக்கு அவமானம் தாங்க முடியவில்லை.

''என்னடா இது? என்னிடம் எல்லாம் சரியாகப் போட்டிருப்பதாக உளறினயே?'' என்று மகாதேவனை பார்த்துக் கோபமாகக் கேட்டார் அவர்.

''ஸார், அவனைக் கேட்டால் அவனுக் கெப்படித் தெரியும்? நான் சொல்கிறேன்'' என்று தன் கோட்டுப் பையிலிருந்து ஒரு பேப்பரை எடுத்தார் கங்காதரன்.

''இதுதான் ஸார், சந்துரு முதலில் எழுதிய கணக்குப் பேப்பர். இதை அரைமணியில் வேண்டுமென்றே தப்புத் தப்பாக எழுதி அங்கே இருந்த என்னிடம் கொடுத்து விட்டான் சந்துரு. உங்கள் மகனும் சந்துருவின் இந்தப் பேப்பரைக் காப்பியடித்

துக் கொடுத்துவிட்டு வீட்டிற்கு வேகமாய் ஓடிப்போனன். ஆனல் சந்துரு என் அனுமதியுடன் மறுபடியும் ஹெட்மாஸ்டர் அறைக்குச் சென்று கணக்குகளைச் சரியாகப் போட்டுக் கொடுத்து விட்டுப் போனன். இது மகாதேவனுக்கு எப்படித் தெரியும்? பாவம்! காப்பியடித்துப் பாஸ் செய்வது என்ருல் முடியுமா?'' என்ருர் கணக்கு வாத்தியார்.

''அப்பா, என்னை மன்னித்து விடுங்கள். இனிமேல் நான் ஒருபோதும் காப்பியடிக்கமாட்டேன். நன்ருகப் படிக்கிறேன். இப்போது காப்பியடித்ததற்குக் கைமேல் பலன் கிடைத்துவிட்டது'' என்று அழுதான் மகாதேவன்.

நீங்களும் நானும்

ஆர்வி

ஏ. தர்மலிங்கம் மஞ்சக்குப்பம்

கே: படித்த மாணவர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்களே. இதற்கு என்ன வழி?

ப: படித்தவர்களைத் தேடி வேலை வரவேண்டும் என்று பெரும்பாலோர் எண்ணுகிறார்கள். யாரையும் தேடிக்கொண்டு எந்த வேலையும் வராது. வேலையைத் தேடிக்கொண்டு அவர்கள்தான் போகவேண்டும். படித்தவர்கள், படிக்க முடியாமல் பாதியில் விட நேர்ந்தவர்கள் எல்லாருமே பட்டினி கிடக்காமல் அரை வயிற்றை நிரப்புவதற்கு ஆயிரம் வழிகள் இருக்கின்றன. பறவைகளும் விலங்குகளும் சர்க்காரையா எதிர்ப்பார்க்கின்றன, வேலையை உண்டாக்கிக் கொடுக்க? சுறுசுறுப்பு, தன்னம்பிக்கை, இரண்டும் மாணவர்களுக்குத் தேவை. யோசனை தன்னால் பிறக்கும். வேலை இருக்குமிடம் தானே புலப்படும். அதை நாடிப் போகலாம்.

சுபாஷ் சந்திரன், சேர்ந்தனூர்

கே: மாணவர்கள் கதை எழுத உட்கார்ந்திருந்தால் படிப்பு வீணாகி விடாதா?

ப; மாணவர்களுக்கு முதலில் கல்விதான் முக்கியம். கதை எழுதுவது என்பது ஒரு திறமை. அதை ஓய்வு நேரத்தில் வளர்த்துக் கொள்ளலாம்.

என். பாண்டுரங்கன். சென்னை 14

கே: சம்மந்தம், சம்பந்தம் விவகாரத்தில் நீங்கள் ஏன் பங்கு கொள்ளவில்லை?

ப: அதில் எனக்கு எந்தவிதச் சம்பந்தமும் இல்லை. அதுதான் காரணம்.

எம். புஷ்பா, பம்பாய் - 19

கே: தமிழில் இப்பொழுதுள்ள மிகச் சிறந்த பத்திரிகை எது?

ப: எங்கள் காரியாலயத்திலிருந்து வெளிவரும் மஞ்சரிதான். எல்லாப் பத்திரிகைகளிலிருந்தும் அறிவுக்கு விருந்தான சிறந்த விஷயங்களை எளிமையாகத் திரட்டித் தருகிறது அது.

ஆர். எஸ். சுந்தரம், வேலூர். வ. ஆ.

கே: தமிழ் நாட்டில் பூகம்பம் உண்டாகியிருக்கிறதா?

ப: பூகம்பம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் பூகம்பத்தால் ஏற்படும் அதிர்ச்சி பலமுறை ஏற்பட்டிருக்கிறது.

தி. வரதராசன், திருவையாறு

கே: இசைக்கும் ஓவியத்துக்கும் தொடர்பு உண்டு என்கிறார்களே, எப்படி?

ப: உள்ளத்தில் ஓவிய உருவங்களை எழுப்பும் சக்தி ராகங்களுக்கு உண்டு. கண்ணுக்குத் தோன்றும் வடிவம் ஓவியம். உள்ளத்துக்குத் தோன்றும் வடிவம் ராகம். ஒன்று ஒளி மயமானது; மற்றொன்று நாதம் அல்லது ஒலி மயமானது. உள்ளத்துக்கு உவப்பான ஒன்றைப் பார்த்தால் பாட்டு கிளம்புகிறதே. அதே போல், உள்ளத்துக்கு உவப்பான ஒலியும் சித்திர வடிவம் பெறுகிறது. அந்த வடிவம் கண்ணுக்குத் தெரியாதபடி சூட்சுமமாக இருக்கும். அதையே கண்ணுக்குத் தெரியும்படியாக ஸ்தூல உருக்கொடுத்து ஓவியமாகத் தீட்டுகிறார்கள். ஓவியங்களுக்கு உணர்ச்சி ஊட்ட நாத மயமான ஒலி வடிவங்களே ஆதாரமாக இருக்கின்றன.

நவநீதன், மாயூரம்

கே: மகாத்மா காந்தியடிகளை நாடு அதற்குள் மறந்து விட்டதா?

ப: நாட்டு மக்கள் அப்படி ஒன்றும் இன்னும் மறந்து விடவில்லை. நாட்டு மந்திரிகள்தான் பெரும்பாலோர் மறந்து விட்டார்கள். விருந்தும் கேளிக்கைகளும் ஆடம்பர வாழ்க்கையும் அடக்குமுறைகளுமாகக் கைக்கொண்டிருக்கிறார்கள்.

7. விநாயகத்துக்கு ஆபத்து!

ஸப் இன்ஸ்பெக்டர் பட்டாபி மூர்ச்சையாகி விழுந்ததும் ஸம்பத்திற்கு ஒரே கலவரமாகி விட்டது. ''அப்பா!..'' என்று கத்திவிட்டான். அவனுடைய கூச்சலைக் கேட்டு ஸம்பத்தின் அம்மாகூட ஓடி வந்துவிட்டாள்.

''என்னடா ஸம்பத்? அப்பாவுக்கு என்ன?'' என்று பரபரப்புடன் கேட்டாள்.



பரிசுபெற்ற தொடர்கதை:

''ஒன்றுமில்லை அம்மா!..திடீரென்று மயக்கம்! வேறு ஒன்றும் இல்லை!'' என்றான் ஸம்பத். ஸ்ரீதரன் சமயோசிதமாகக் குளிர்ந்த நீரைக் கொண்டு வந்து முகத்தில் தெளித்தான். பட்டாபி கண்ணை விழித்துச் 'சடக்' கென்று எழுந்து உட்கார்ந்தார். கொஞ்சம் குளிர்ந்த நீரைக் குடித்தபின் தெம்பு வந்தது.

''அப்பா! என்ன இப்படி?.. அந்தக் கடிதத்தில் அப்படி என்ன இருக்கிறது?'' அதற்குள் அம்மாவும் காபி போட்டுக்கொண்டு வந்து வைத்தாள்.

''ஸம்பத்! நாழியாகிறது. நாளைக்குச் சொல்கிறேன். மணி இரண்டரை ஆகிறது. போய்த் தூங்கு..உடம்புக்கு ஆகாது..'' என்றார் அவர்.

''நீங்கள் இதைச் சொல்லாமல் இருந்தால் எனக்குத் தூக்கம் வராது. சொல்லுங்கள். எனக்குக்கூடத் தெரியாமல்..''

''ஆமாம், ஸம்பத்! கேஸுக்குச் சம்பந்தப்பட்ட விஷயந்தான். ஆனால் உன்னிடம் இப்பொழுது அதைச் சொல்வதில் லாபம் இல்லை.''

''என்ன அப்பா புதிராகப் பேசுகிறீர்கள்? ஏன் லாபம் இல்லை?''

''தயவுசெய்து அதை இப்பொழுது கேட்காதே, ஸம்பத்! அதைச் சொன்னால் உனக்கு என்ன விபரீதம் நேருமோ தெரியாது, நான் சொல்கிறேன், கேள்! நீ இந்த விஷயத்தைத் தெரிந்து கொள்ளாமலேயே இந்தக் கேஸைக் கண்டுபிடிக்கலாம். இனிமேல் நானும் தீவிரமாக முனையப்போகிறேன்.''

ஸம்பத் யோசித்தான்.

''சரி அப்பா!..அது போகட்டும். அந்த வேர்க்கடலை விற்கும் பையனுக்கும் 'கறுப்புக் கண்ணாடி'க்கும் சம்பந்தம் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறீர்களல்லவா?''

''நிச்சயமாக. அந்தப் பையனை எனக்கு நாளை காட்டிவிடு.'' அதற்குள் ஸ்ரீதரன், ''ஏன் ஸம்பத், நாளைக்கே அந்தப் பையனைப் பிடித்து 'அரெஸ்ட்' செய்யவேண்டாமா?'' என்று கேட்டான்.

''இல்லை, ஸ்ரீதரா! அப்படிச் செய்யக்கூடாது. எதிரிகள் ஜாக்கிரதையாகி விடுவார்கள். அவர்கள் போக்கில்விட்டுத்தான் மடக்க வேண்டும்'' என்றார் பட்டாபி.

''முதலியார் வீட்டில் பகற் கொள்ளை போய்விட்டது என்று சொல்கிறீர்களே அது எப்படி?..''

''ஸம்பத்! எனக்குத் தோன்றுகிறது. இவர்களாகத்தான் இருக்குமென்று. சுமார் ஒரு வருஷத்திற்கு முன் இந்தக்கறுப்புக் கண்ணாடி ஒரு கேஸில் ஒரு மாதத் தண்டனை அடைந்திருக்கிறான். பெயர் எதிராஜ். அப்பொழுது நான் இவனைச் சரியாகக் கவனிக்கவில்லை .... அப்புறம்தான் 'கறுப்புக் கண்ணாடி'யை மாட்டிக்கொண்டானே என்னவோ! அப்புறம் எத்தனையோ முறை அவனைப் பிடிக்க முயன்று தோற்றாகி விட்டது.''

''எதற்காக அப்பா அந்தக் கறுப்புக் கண்ணாடி?''

''அதுதான் தெரியவில்லை. அந்தக் கண்ணாடியில் ஏதோ விசேஷம் இருக்கிறது.''

''அவனை எப்படி நீங்கள் திடீரென்று சந்தேகித்து, என்னிடம் சொன்னீர்கள்? நீங்கள் சொன்னது சரியென்று அவன் அறையைத் தேடிப் பார்த்துக் கிடைத்த பொருள்களிலிருந்துதான் தெரிய வந்தது.''

''என் சந்தேகத்தைப் பலவிதத்தில் ஊர்ஜிதம் செய்தேன்.

இப்பொழுது சென்னையில் எனக்குத் தெரிந்து வேறு கேடி, கேப்மாரிகள் கிடையாது. 'கருடாசிங்' என்ற கஜத்திருடன்கூடச் சிறையிலிருக்கிறான். வேறு பழக்கப்பட்ட ஆளாக இருக்காது என்றுதான் நிச்சயம் செய்தேன். அதோடு இந்தக் 'கறுப்புக் கண்ணாடி' ஊருக்குப் புதிது. வந்து இரண்டு வருடங்கள்தான் ஆகின்றன. இப்பொழுது அவனுக்குத் தைரியம் வந்துவிட்டது. துள்ளுகிறான். அதோடு மட்டுமில்லை. அவனை நன்றாகக் கவனித்திருக்கிறேன். நடத்தை சரியாக இல்லை.''

''அப்பா! இருங்கள்! நான் கொண்டு வந்திருக்கும் பொருள்களைக் காண்பிக்கிறேன்..'' என்று சொல்லி, ஸம்பத் ஒரு காகிதக் கட்டு, ஒரு சாவிக் கொத்து, ஒரு 'டயரி' மூன்றையும் எடுத்துப் போட்டான். ஸ்ரீதரனும் பட்டாபியும் ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தார்கள். அதை பட்டாபி எடுத்துக்கொள்ளுமுன் ஸம்பத் அவைகளை எடுத்துத் தன் பைக்குள் வைத்துக்கொண்டு, ''என்னிடம் இருக்கட்டும் அப்பா! தூக்கம் வருகிறது, இந்த விவரங்களை நாளை சொல்கிறேன். நீங்கள் தூங்குங்கள்'' என்று சொல்லி விட்டு எழுந்துவிட்டான். பட்டாபியும் புன்னகையுடன் எழுந்தார். ஸ்ரீதரனும், ஸம்பத்தும் மாடிக்குப் போனார்கள். அப்பொழுது மணி மூன்று.

* * *

விநாயகம், அந்தப் பங்களாவின் வாசல் பாலத்தினடியில் போவதற்கும், அந்தக் கூர்க்கா 'டார்ச்' வெளிச்சத்தைப் புதருக்குள் வீசுவதற்கும் சரியாக இருந்தது. 'நல்ல வேளை! தப்பித்தோம். அந்தப் பாலத்தினடியில் நிச்சயமாக 'டார்ச்' வெளிச்சம் விழப் போவதில்லை'' என்று நினைத்துக் கொண்டான் விநாயகம். அப்புறம் அந்தக் கூர்க்கா என்ன செய்தான் என்று அவனுக்குப் புரியவில்லை. சிறிது நேரம் ஒரு சத்தமும் கேட்கவில்லை. இருட்டில் அங்கே உட்கார்ந்திருப்பது அவனுக்குச் சிரமமாகத்தான் இருந்தது. அடிக்கடி எறும்புகள் கடித்து அவனை இம்சை செய்துகொண்டிருந்தன. பல்லைக் கடித்துக்கொண்டுதான் உட்கார்ந்திருந்தான். மூச்சுக்கூட லேசாக இழுத்தான். அவன் சிந்தனை ஓடியது. 'நாளைக் காலை 'டிரஸ்'ஸோடு வருகிறேன்' என்று சொல்லிவிட்டு வந்தவன் அவன். அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. அந்தக் 'கறுப்புக் கண்ணாடி'யிடமிருந்து அந்தப் போலீஸ் டிரஸ்ஸை வாங்க முடியவில்லை. 'காலையில் போய்இன்ஸ்பெக்டர் ஐயாவிடம் எந்த முகத்தைக் காண்பிப்பது? வேலைக்கே ஆபத்து வந்துவிடும் போலிருக்கிறதே!' என்று நினைத்தபொழுது அவனுக்குப் பயமாக இருந்தது. 'கடவுளே! அந்தப் போலீஸ் டிரஸ் எங்கேயிருந்தாலும் இங்கே கொண்டுவந்து கொடுக்கமாட்டாயா?' என்று வேண்டிக் கொண்டான். அவன் கூறியது கடவுளின்

காதுகளில் கேட்டதோ, என்னமோ; தெரியாது. அவனுடைய முழங்கை 'மொட்'டென்று எதிலோ மோதியது. அப்பொழுது தான் பின்னல் இருக்கும் பொருளைக் கவனித்தான்...ஒரு மூட்டை! ஆகா!..அது என்ன மூட்டை?.. யோசித்தான்..யோசித்தான்.... அது என்ன மூட்டையாக இருக்கும்..அந்தக் கூர்க்கா, திருட்டுப் பயல் கூர்க்கா, கொண்டுவந்த மூட்டையாக இருக்கும். ஆமாம்! அதேதான்! அந்தப் பையனிடம் கொடுத்தனுப்பித்த மூட்டையல்லவா அது? அதைத்தான் இங்கே மறைத்து வைத்திருக்கிறன் போலிருக்கிறது. பல எண்ணங்களுக்கிடையே விநாயகம் மூட்டையைப் பிரித்தான் ஆவலோடு. அவனுக்கு அவன் கண்களையே நம்ப முடியவில்லை. ஏனெனில் அந்த மூட்டையில் இருந்தது போலீஸ் உடைகள்தான் 'ஆகா! என்ன அதிர்ஷ்டம்!....என்ன அதிர்ஷ்டம்! அந்தப் போலீஸ் உடைகளோடு ஓர் இரும்புப் பெட்டி வேறு இருக்கிறதே!.. பெட்டியில் என்ன இருக்கிறதோ? நகைகளோ?..ஆகா! 'லக்கி' தான்!' என்று நினைத்துக்கொண்டான். மறுபடியும் மூட்டையை ஒரே கட்டாகக் கட்டினன். 'இனிமேல் எவ்வளவு சீக்கிரம் அங்கிருந்து நகரமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் நகரவேண்டும். மறுபடியும் வைத்த இடத்தில் அந்தக் கூர்க்கா வந்து எடுத்துக்கொள்வதற்காகத் தேடலாம். கிளம்பவேண்டும்!' அவன் அப்படி தீர்மானத்திற்கு வந்த சமயத்தில், வெளியே பேச்சுக் குரல் கேட்டது. அந்தக் கூர்க்காவிடம் யாரோ ஒருவன் பேசிக்கொண் டிருந்தான். பாதிதான் அவன் காதில் கேட்டது.

''....அப்புறம்? மூட்டை எங்கே?''

''இங்கேதான். இந்தப் பாலத்தினடியில்..''

''சரி, வேலை முடிந்துவிட்டது சுலபமாக. வா, சீக்கிரம்.''

''எனக்கு இப்பொ ஒரு கவலை. யாரோ நம் இடத்தைக் கண்டு பிடித்துவிட்டான்.''

''சரி, சரி; அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்.''

''இரு. நான் மூட்டையை எடுத்துக்கொண்டு வருகிறேன்.''

அதைக் கேட்டதுதான் தாமதம். விநாயகம் மூட்டையைக் கையில் அடக்கிக்கொண்டு தயாராக இருந்தான். 'எந்தப் பக்கம் வருகிருனே அதற்கு எதிர்ப்பக்கத்தில் தாவி ஓடவேண்டியது. ஓடவேண்டும். ஓடவேண்டும்' என்று தீர்மானமாக இருந்தான். புதர் சலசலத்தது. விநாயகம் ஒரே பாய்ச்சலில் எதிர்ப்பக்கம் பாய்ந்து ஓடினன். கூர்க்காவின் கையிலிருந்த 'டார்ச்' விளக்கிலிருந்து ஒளி வீசிப் பரவியது. 'ஐயோ! அவனைப் பிடி' என்று அழுத்தமான குரலில் கத்தினன் அவன். விநாயகம் ஒரே ஓட்டமாக ஓடிக்கொண் டிருந்தான். கூர்க்காவோ அவனைப் பன்மடங்கு வேகத்தில் தொடர்ந்து வந்தான். அதோடு மட்டுமல்ல. ''திருடன்! திருடன்!'' என்று கத்திக்கொண்டு ஓடிவந்தான். விநாயகத்திற்குப் பயம் வந்தது. கூர்க்காவோ காக்கி உடையில் இருக்கிறன். அவனே சாதாரண உடையில்! ஜனங்கள் விழித்துக்கொண்டு வந்தாலும் அவனை எப்படிச் சந்தேகிப்பார்கள்? விநாயகத்தைத்தானே 'திருடன்' என்று நினைப்பார்கள்! அதோடு அந்தப் பங்களாவில் திருடினதும் அவன்தான் என்று நினைத்து உதைக்கப் போகிறர்கள். கூர்க்கா நெருங்கி ஓடிவந்துகொண் டிருக்கும் காலடிச் சத்தம் கேட்டது. ஜனங்கள் ஆங்காங்கே விழித்துக்கொள்ளும் சப்தம் கேட்டது. 'மோசம் போய் விட்டது! இனி வழியில்லை. மாட்டிக்கொள்ள வேண்டியதுதான்!' என்று கலங்கினன் விநாயகம்.

தொடரும்



நாலைந்து மாணவர்கள் உட்கார்ந்து கவலையோடு பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லாரும் உள்ளூர் மாணவர்கள். எல்லாருமே கால்பந்தாட்டக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். ராஜு, மணி, குமார், கோவிந்த்..

பேச்சு மறுநாள் காலை வர விருந்த வெளியூர்க் கோஷ்டியைப் பற்றித்தான். இரண்டு கோஷ்டிகளுக்கும் நாளை மாலை கடுமையான போட்டி நடக்க விருந்தது. இந்தச் சமயத்திலா அவர்களுடைய கோஷ்டிக்குள் ஒரு பூசல் உண்டாக வேண்டும்?

கடைசி நேரத்தில் விநாயகம் காப்டனாக வர விரும்பினான். அவன் நல்ல பண வசதியுள்ளவன். நமது மாணவர்களில் சிலருக்குக் கேட்க வேண்டுமா? பணமுள்ளவன் என்ன செய்தாலும், சொன்னாலும் 'சரி சரி' என்று தலையாட்டிக்கொண்டிருப்பார்கள், நல்லது கெட்டது, நியாயம் தவறு எல்லாம் தம் மனத்துக்குத் தெரிந்திருந்தாலும், அதை விட்டு அவன் கட்சியையே ஆதரிப்பார்கள். ஓர் உறுதி, மனச்சாட்சி எல்லாவற்றையும் பறக்கவிட்டு விடுவார்கள்.

அப்படித்தான் ஆயிற்று. இத்தனை நாள் வரையில் காப்டனாக இருந்தவன் கோபால். விளையாட்டில் தலைசிறந்தவன்; அந்த ஊர்க் கோஷ்டிக்கு அவனாலேயே நல்ல பெயர். ஆனால் கோஷ்டியிலுள்ளவர்கள் சிலர் இப்போது விநாயகத்தைக் காப்டனாக்க விரும்பியது தெரிந்ததும், அவன் தன் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டான். அத்துடன் மட்டுமல்ல; அந்தக் கோஷ்டியிலிருந்தே விலகிவிட முடிவு செய்துவிட்டான். ஆடுவதில் திறமையோ அநுபவமோ இல்லாத ஒருவனை, அவனுடைய பணத்துக்காகக் காப்டனாக்குவது சரியா என்பதே அவன் கேள்வி. இதனால் கோபாலின் கட்சியாகச் சிலரும் விநாயகத்தின் கட்சியாகச் சிலரும் பிரிந்து நின்றார்கள்.

மறுநாள் கடுமையான பந்தயப் இருக்கும்போது இப்படிப் பிரிந்து நிற்கும்படி ஆகிவிட்டதே என்றுதான் அந்த மாணவர்கள் கவலைப்பட்டார்கள். சிலர் சமாதானம் செய்து வைப்பதற்காக முன்வந்தார்கள். ''நாளை ஒரு நாள் மட்டும் விநாயகமே காப்டனாக இருந்துவிட்டுப் போகட்டும். அப்புறம் கோபாலே காப்டனாக இருக்கலாம்'' என்று அவர்களில் கோவிந்தன் என்பவன் கூறினான். கோபால் கட்சியினர் இதை ஏற்பார்களா? ஆகவே அவன் விநாயகத்திடம் போய், ''இவ்வளவு நாள் இருந்தது இருந்தான். நாளையும் அவனே காப்டனாக இருந்துவிட்டுப் போகட்டும். அப்புறம் உன்னையே எல்லாருமாகச் சேர்ந்து காப்டனாக்கி விடுகிறோம்!'' என்றான். அவனும் இதற்கு ஒப்புக்கொள்ளாமல் பிடிவாதமாகவே இருந்தான். ''நான் எவ்வளவு பணம் கேட்டா

லும் கொடுக்கிறேன். நாளை நான் காப்டனுக இருந்தால் போதும்'' என்றுன் விநாயகம்.

''கோபாலுக்கா பணம் தருகி றேன் என்கிருய்?'' என்றுன் கோவிந்தன்.

''ஏன், அவனுக்குப் பணம் என் ருல் கசக்குமோ?''

''உனக்குப் பணம் பெரிதாக இருக்கலாம். ஆனல் அவனுக்கு நேர்மைதான் பெரிது. அவன் என்ன, அவன் குடும்பமே அப்படி. அவர்கள் அந்தப் பணத்தைப் பெரிது என்று எண்ணியிருந்தால் இன்று உன்னைப்போலவே பங்களா வில் வசித்துக்கொண் டிருப்பார் கள். இன்னெரு முறை அப்படிப் பேசாதே!'' என்றுன் கோவிந்தன்.

கோவிந்தனுக்குக் கோபம் என் பதே வராது. அதனல் கூடவந்த வர்கள், ''அப்படி என்ன நடந்தது சொல்லேன்!'' என்றுர்கள்.

"கேள், விநாயகம், நீயும் கேள்!'' என்று கூறிவிட்டு, கோவிந்தன் தொடங்கினுன்.

* * *

இரண்டாவது உலக மகா யுத் தம் நடந்துகொண் டிருந்தது. அந்தச் சமயத்தில் சென்னைப் பட்டணம்கூட ஜப்பான் குண்டுக் குப் பயந்து மெல்ல மெல்லக் காலி



யாகிக்கொண் டிருந்தது. சென்னை யிலிருந்த ஆபீஸ்களும் கம்பெனிக ளும் குக்கிராமங்களுக்குப் போய்க் கொண்டிருந்தன. குடியும் குடித் தனமுமாக இருந்தவர்கள் அனை வரும் தங்கள் தங்கள் ஊர் நோக்கிப் புறப்பட்டார்கள். ஆனால் நாளுக்கு நாள் சென்னையில் ராணு வத்தார்கள் மட்டும் குவிந்து கொண் டிருந்தார்கள். புதிய புதிய இடங்களாகத் தேர்ந் தெடுத்து ராணுவ இலக்குகளாக அமைத்து வந்தார்கள்.

ஒரு நாள் இரவு—

அன்று வானத்தில் கருமுகில்கள் தட்டா மாலை ஆடிக்கொண் டிருந் தன. விட்டு விட்டு மழை, ஒன் றிரண்டாகத் தூறிக்கொண் டிருந் தது. அந்த நேரத்தில் துறைமுகப் பக்கமாக வட்டமிட்டு வந்தது ஒரு விமானம்!

உடனே கடற்கரைப் பகுதியி லிருந்த ராணுவ முகாம்கள் பரபரப் புற்றன. நகரிலுள்ள விமான அபாய அறிவிப்புச் சங்குகள் எல் லாம் அலறத் தொடங்கின. துப் பாக்கிகளும் குண்டுகளும் காதுகள் செவிடுபடும்படி முழக்க வாரம் பித்தன. ஆகாயத்தில் வந்த ஒரு விமானத்தைத் தாக்க எத்தனை விமான பீரங்கி வெடிகள்! எத்தனை விமானங்கள்! ''ஜப்பான்காரன் விமானம்! ஜப்பான் குண்டு விழப் போகிறது!'' என்று நகரிலிருந்த ஒரு சில தைரியசாலிகளும் தூக் கத்திலிருந்து எழுந்து பாது காப்புப் பள்ளங்களை நோக்கி ஓடி விட்டார்கள்.

ஆனால் இத்தனையையும் பொருட் படுத்தாமல், வந்த வேகத்தைவிடப் பன்மடங்கு வேகத்தோடு திரும்பி யது அந்தத் தனி விமானம். வெள்ளைக்கார விமானங்கள் அதைச் சுட்டுத் தள்ளுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு துரத் தின. அந்தமான் தீவுகளை நோக்கிச் சென்ற அந்த விமானம் ஒரு குண் டுக்கும் அகப்படாமல் சமாளித்துக் கொண்டுதான் பறந்தது. துரத்திய விமானங்கள் மேலும் கீழும், முன் னாலும் பின்னாலுமாக அதைச் சூழ்ந்துகொண்டு வெடிகளைச் சர மாரியாகப் பொழிந்தன. அந்தத் தனி விமானம் இவ்வளவுக்கும் ஈடு கொடுத்துக் கொண்டு, பதிலடியும் கொடுத்து வந்தது. பார்க்கப் போனால் கூட்டமாக வந்த விமா னங்களில்தான் சில முறிந்து, எரிந்து விழுந்தன. தனி விமா னமோ வெகுநேரம் அப்படியும் இப்படியும் நெளிந்தும் வளைந்தும் போய்க்கொண்டேயிருந்தது. ஆயி னும் எவ்வளவு நேரம்தான் சாகசம் புரிய முடியும்? அந்தமான் தீவு

களின் எல்லைக்கு அருகில் போகும் போது எதிரிக் குண்டு அதன் இறக்கை ஒன்றை ஒடித்துவிட்டது. அதைப் பார்த்த பிறகு துரத்தி வந்த விமானங்கள் மகிழ்ச்சியோடு திரும்பின. தனி விமானம் இறக்கை ஒடிந்த பிறகுகூட, கடலிலே முறிந்து விழாமல் வெகுதூரம் போய்க்கொண்டே இருந்தது. கிட்டத்தட்ட ஐராவதிக் கரையை நெருங்கிய சமயத்தில் மீண்டும் அதன்மீது ஒரு குண்டு பாய்ந்தது. இவ்வளவு தூரம் எதிரிகளிடம் சிக்காமல் தப்பி வந்த அந்த விமானம் குப்பென்று தீப்பற்றிக் கொண்டு விட்டது. அதிலிருந்து இரண்டு பேர் விமான வீரர்கள்தான்—பாரசூட் மூலமாக இறங்குவதைக் கரையோரத்திலிருந்த ராணுவ வீரர்கள் கண்டார்கள்.

எதிரி விமானத்தைச் சுட்டு வீழ்த்துவது என்றால் எத்தனை பெரிய மகிழ்ச்சி!

ஆம்; பாரசூட்டிலிருந்து இறங்கிய இரு விமான வீரர்களும் ஐராவதி நதிக்கரை ஓரமாக இருந்த ராணுவப் படையினருக்கு எதிரிகள் தான்!

நேச நாட்டுப் படையினர் பர்மாவினுள் நுழைந்து வரும் ஜப்பானியர்களைத் தடுப்பதற்காகப் போரிட்டு வந்தார்கள். ஆனால் இந்த விமான வீரர் இருவரும் ஜப்பானியர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்த்த அவர்கள் ஏமாந்து போனார்கள்.

அவர்கள் இருவரும் இந்தியர்கள்! அதிலும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். இவர்கள் எப்படி ஜப்பானிய விமானத்தில் இருந்தார்கள்?

பாரசூட்டிலிருந்து இறங்கிய வீரர்கள் இருவரையும் வளைத்துக் கொண்டார்கள் நேச நாட்டுப் படையினர். அவர்களுடைய ராணுவப் பிரிவுத் தளபதி அவர்களைப் பரிசோதனை செய்தார். பார்த்தால் அவர்கள் இந்திய விடுதலைச் சேனையைச் சேர்ந்தவர்கள் என்று தெரிந்தது. அதாவது வங்க வீரர் சுபாஷ் சந்திர போஸ், இந்திய நாட்டை வெள்ளைக்காரரிடமிருந்து விடுவிப்பதற்காக ஒரு படை திரட்டியிருந்தார். கிழக்கு ஆசிய நாடுகளிலும், மலேயா சிங்கப்பூரிலும் பர்மாவிலும் இருந்த இந்தியர்களைக் கொண்ட ஒரு பெரும் சேனையைத் திரட்டி அந்தமான் தீவுகளைத் தலைமைக் காரியாலயமாக அமைத்திருந்தார். ஜப்பானியர்கள் விமானங்களும் யுத்த தளவாடங்களும் கொடுத்து அவருக்கு உதவியாக இருந்தார்கள். இந்த விடுதலைச் சேனை ஜப்பான் படையுதவியுடன் பர்மாவையெல்லாம் வெகு சுலபமாகக் கடந்து இந்தியாவை எட்டத் திட்டமிட்டிருந்தது.

நேச நாட்டினருக்கு இந்தப் படையை எப்படியாவது தடுக்க வேண்டும் என்று எண்ணம். ஆனால் ஜப்பானியரோடு இந்தியரும் பர்மா எல்லைகளைத் துளைத்துக்கொண்டு முன்னேறி வந்தார்கள். இந்தப் படையினர் இந்தியர்களுடன் தொடர்பு கொள்வதையும், இந்தியர்கள் இவர்களைப் பற்றித் தெரிந்து கொள்வதையும் அவர்கள் அரும்பாடுபட்டுத் தடுத்து வந்தார்கள். அந்த நிலையில் அகப்பட்டுக் கொண்ட இந்த இருவரும் தேசிய ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிந்ததும் சும்மா விடுவார்களா?

நேச நாட்டுப் படையின் அந்தப் போர்முனையிலே இரண்டு அமெரிக்கர்கள் இருந்தார்கள். ஒருவர் பெயர் டேனியல்; மற்றொருவர் பிராங்க்ளின். இந்த இருவர் முன்னிலையில் தேசீய ராணுவத்தைச் சேர்ந்த நாராயணசாமியும் கோபாலசாமியும் கொண்டு போய் நிறுத்தப்பட்டார்கள். அவர்களுடைய ராணுவ உடையைப் பார்த்த அந்த நேச நாட்டு அதிகாரிகளுக்கு மகா கோபம் வந்தது.

''பிடித்துக் கட்டுங்கள் இவர்களை!'' என்றார் டேனியல்.

''சுட்டுத் தள்ளுங்கள் இவர்களை!'' என்றார் பிராங்க்ளின்.

ஆனால் அவர்களைப் பிடித்துக் கட்டிய பிறகு டேனியலுக்கு வேறு ஒரு யோசனை உதித்தது.

''ஜப்பானியர்கள் நேச நாட்டினர் யாராவது அகப்பட்டால்

இரக்கமின்றி வதைத்துக் கொல்கிறார்களே, அது தெரியுமா உங்களுக்கு?'' என்று நாராயணசாமியிடம் வந்து கேட்டார்.

''தெரியும்.''

''ஆனால் நாங்கள் எதிரிகளைக் கூட மனிதர்களாக மதிக்கிறோம். அவர்களைக் கொடுமைப்படுத்த விரும்புவதில்லை. அது தெரியுமா உங்களுக்கு?''

''தெரியாது.''

''அதை இப்போது தெரிந்து கொள்ளுங்கள். நாங்கள் உங்களைத் துன்புறுத்த விரும்பவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக நீங்கள் நல்ல முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம்! நடப்பீர்களா?''

நாராயணசாமியும் கோபாலசாமியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். ''நடப்போம்'' என்பது போலத் தலையை அசைத்தார்கள்.

''அப்படியானால் சரி; உங்கள் தலைவர் நேதாஜி என்பவர் இப்போது எங்கே இருக்கிறார்?''

நாராயணசாமியும் கோபாலசாமியும் இதற்குப் பதில் சொல்ல விரும்பவில்லை. மௌனமாக இருந்தார்கள்.

''உங்களைத்தான் கேட்கிறேன்! நேதாஜி எங்கே? அவருடைய கேந்திரஸ்தானம் எது? அதைச் சொன்னால் உங்களைக் கொடுமைப்படுத்தாததுடன் மட்டுமல்ல. உங்களுக்கு விடுதலையே கொடுத்து விடுகிறோம். சொல்லுங்கள்!''

''எங்களுக்குத் தெரியாது'' என்றார் கோபாலசாமி.

நாராயணசாமியும் அதையே கூறினார்.

''பொய்!'' என்று பயங்கரமாகக் கூவியவாறே டேனியல் கைத்துப்பாக்கியைத் தூக்கினார்.

''மரியாதையாக உண்மையைச் சொல்லாவிட்டால் உங்கள் தோலை உரித்து விடுவோம்!'' என்றார் பிராங்க்ளின்.

''எங்களுக்குத் தெரியாது!''

''சுட்டுத் தள்ளிவிடுவேன்! மரியாதையாக அந்த விவரங்களைச் சொல்லி விடுங்கள்!'' என்றார் பிராங்க்ளின்.

''நேதாஜியின் இருப்பிடமும் தெரியாது; ராணுவ ரகசியங்களையும் நாங்கள் அறியோம்!'' என்று சிறிதும் கலவரமின்றிக் கூறினார் கோபாலசாமி.

அடுத்த நிமிஷம் பிராங்க்ளின் ஏதோ சைகை காட்டவே அந்த இருவரையும் சூழ்ந்துகொண்டு மூன்று சிப்பாய்கள் நின்றார்கள். அவர்களுடைய துப்பாக்கிச் சனியன்கள் முகத்தில் பாய்வதற்குத் தயாராக இருந்தன.

''கடைசித் தடவையாகக் கேட்கிறேன்!'' என்று மிரட்டினார் டேனியல்.

''எங்களை மிரட்டி என்ன பயன்? எங்களுக்கு அதெல்லாம் ஒன்றும் தெரியாது தெரிந்த விவரங்களைக் கூறுவதைவிட உயிரை விடுவதே மேல் என்று எண்ணுகிறோம் நாங்கள். ஆகையால் உடனே சுட்டுக் கொன்று விடுங்கள். எங்கள் தலைவருக்கும் அதனால் எங்கள் நாட்டுக்கும் துரோகம் இழைப்பதைவிட நாங்கள் உயிர் விடுவதையே பெரிதாக விரும்புகிறோம்!'' என்றார் கோபாலசாமி.

டேனியலின் சிவந்த முகம் குரங்கு முகம்போல இருந்தது. பழுத்துக் கிடந்த பற்களை அவர் நறநறவென்று கடித்தார். கையிலிருந்த துப்பாக்கியின் அடிக்கட்டையால் கோபாலசாமியின் முகத்தில் இடித்தார். பூட்ஸ் காலால் ஓர் உதை கொடுத்தார்

பிராங்க்ளின். அத்தனையையும் பொறுத்துக்கொண்டு அவர்கள் மௌனமாக இருந்தார்கள்.

''அப்புறம் வருகிறோம். அதற்குள் ஒரு முடிவுக்கு வாருங்கள். உண்மையைச் சொல்ல விரும்புகிறீர்களா, உயிரை விட விரும்புகிறீர்களா என்பதை நீங்களே முடிவு செய்து வையுங்கள்!'

பிராங்க்ளினும் டேனியலும் இதைக் கூறிவிட்டுச் சென்றார்கள். அப்புறம் வெகு நேரம் கழித்துத் திரும்பி வந்தார்கள். பின்னல் வந்த இரு சிப்பாய்கள் ஒரு மூட்டையையும் ஒரு தோல் பெட்டியையும் எடுத்து அவர்கள் முன்னே வைத்தார்கள்.

டேனியல் சிரித்த முகத்தோடு எதிரே வந்து நின்று, ''அவற்றைத் திறந்து காட்டுங்கள்!'' என்று சிப்பாய்களுக்குக் கட்டளையிட்டார்.

ஒரு சிப்பாய் தோல் பெட்டியைத் திறந்து காட்டினான். மற்றொரு சிப்பாய் அந்த மூட்டையைத் திறந்து காட்டினான்.

தோல் பெட்டியினுள்ளே கற்றை கற்றையாக நூறு ரூபாய் நோட்டுகள் பளபளத்தன. மூட்டையினுள் குண்டூசிகளும் கற்களும் இருந்தன.

''உண்மையான விவரங்களைக் கூறினால் இது கிடைக்கும். இதிலே எவ்வளவு இருக்கிறது தெரியுமா? சரியாக ஐந்து லட்ச ரூபாய்! இல்லையோ இத்தனை ஊசிகளும் உங்கள் நகக்கணுக்களிலே ஏறிவிடும். வலியினால் கதறி உயிரையே விட்டுவிடுவீர்கள். துப்பாக்கி முனையில் சட்டென்று சுலபமாகச் சாகலாம் என்று கோட்டை கட்டிக்கொள்ளாதீர்கள். அப்படியும் உயிர் போகாவிட்டால் இந்தக் கற்களாலேயே அடிபட்டுச் சாவீர்கள்!'' என்றார் டேனியல்.

நாராயணசாமிக்கும் கோபாலசாமிக்கும் பேச்சே எழும்பாமல் மூச்சு முட்டியது. ''சித்திரவதை செய்ய விரும்பாத புண்ணியவான்களா இவர்கள்!'' என்று கூறிப் பெருமூச்சு விட்டார்கள்.

''ஆம்; சித்திரவதை செய்யும்படி நீங்கள் ஏன் வைத்துக்கொள்ள வேண்டும்? அதற்கு இடம் கொடாமல் உண்மையைக் கூறிவிட்டால், அதோ ஏரோப்ளேன்! இதோ பணம்! எடுத்துக்கொண்டு ஊருக்குப் போய் மனைவி மக்களோடு மகிழ்ச்சியுடன் இருக்கலாமே!''

கோபாலசாமி இதைக் கேட்டுப் புழுவாகத் துடித்தார். ''எங்களைத் துரோகியாகச் சொல்கிறீர்களா?'' என்று ஆத்திரப்பட்டார். ஆனால் நாராயணசாமி ஒன்றுமே கூறவில்லை. சிறிது நேரம் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருப்பதுபோல் தோன்றினார்.

ஒன்றும் பயன்படாததைக் கண்ட ராணுவ அதிகாரி கோபாலசாமியின் முகத்திலே காரித் துப்பிவிட்டு நாராயணசாமியைப் பார்த்து, ''நீ என்ன சொல்கிறாய்?'' என்றார்.

''நான் பிள்ளை குட்டிக்காரன். நான் சாக விரும்பவில்லை. நோகவும் விரும்பவில்லை!'' என்று வெகு நிதானமாகக் கூறினார்.

''துரோகி! கேவலமானவனே! அற்பனே!'' என்று கத்தினார் கோபாலசாமி நாராயணசாமியைப் பார்த்து.

''ஆம்; நான் சாக விரும்பவில்லை. வீட்டுப் பக்திக்குப் பிறகுதான் நாட்டுப் பக்தி. என் மனைவியையும் மக்களையும் சந்தியில் நிறுத்தித் திண்டாட விட்டுவிட்டு, நாட்டுக்காக உயிரை இப்போது விட நான் தயாராக இல்லை. யார் என்ன சொன்னாலும் சரிதான். நான் உண்மை விவரங்களைக் கூறிவிடத்தான் போகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை!'' என்றார் நாராயணசாமி.

''என்ன, என்ன?'' என்று ஆவலோடு அவசரப்பட்டார் டேனியல்.

''என் நண்பனிடம் அந்தத் தோல் பெட்டியைக் கொடுக்க வேண்டும். அவனை முதலிலேயே விமானத்திலேற்றித் தாய் நாடு அனுப்பவேண்டும். விமானம் புறப்பட்ட பின்னர் நான் உண்மையைக் கூறத் தடையில்லை!''

கோபாலசாமி கோபத்தினால் துடிதுடித்தார். ''உன் பணத்தை,

பாவ மூட்டையை, நான் தொட மாட்டேன்!'' என்றார்.

''நீ தொடவேண்டாம். அந்தப் பணம் உனக்கு அல்ல. அதை என் மனைவியிடம் எனக்குப் பதிலாகக் கொடுத்துவிடு. அது போதும்!'' என்று கூறிவிட்டு, டேனியலைப் பார்த்து, ''என் மனைவிக்கு நான் ஒரு கடிதம் எழுதித் தரலாமா?'' என்று கேட்டார்.

''ஓ - அதற்கென்ன!'' என்றார் டேனியல்.

அதிகம் ஏன்?

கோபாலசாமி தோல் பெட்டியுடன் விமானத்தில் ஏறிக் கொண்டார். விமானம் கண்ணுக்கெட்டிய தூரம் செல்லும் வரையில் பார்த்துக்கொண்டே இருந்தார் நாராயணசாமி. பிறகு அருகிலிருந்த ஒரு சிப்பாயைப் பார்த்து, ''கொஞ்சம் தண்ணீர் கொடு. தாகமாக இருக்கிறது!'' என்றார்.

* * *

'கொர்' என்று வங்காளக் குடாக் கடலின்மேல் விமானம் பறந்துகொண் டிருந்தது. விமானத்திலிருந்த ஒரே பிரயாணியான கோபாலசாமி ஜன்னல் வழியாக அந்தத் தோல் பெட்டியிலிருந்த புத்தம் புது நோட்டுக்களைக் கடலில் எறிவதற்காகக் கையில் எடுத்தார். மேலே நாராணசாமி மனைவிக்குத் தமிழில் எழுதிய கடிதம் மடிக்காமல் வைக்கப்பட்டிருந்தது. அதன் முதல் வரியைப் பார்த்ததுமே கோபாலசாமிக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஏனெனில் அது, ''அன்புள்ள நண்பன் கோபாலசாமிக்கு'' என்றுதான் ஆரம்பிக்கப்பட் டிருந்தது.

''அன்புள்ள கோபாலசாமிக்கு, வணக்கம்.

நீ இதைப் பார்க்கும்போது என் மடியிலிருக்கும் விஷம் என் வயிற்றில் இருக்கும். பக்தி என்பதில் வேற்றுமை கிடையாது. நாட்டுப் பக்திதான் வீட்டுப் பக்தி. வீட்டுப் பக்திதான் கடவுள் பக்தி. ஆகவே, தாய்நாட்டுக்குத் துரோகம் செய்பவன் கடவுளுக்கும் துரோகம் செய்தவன் ஆகிறான். நீயாவது உயிர் பிழைக்கலாம் என்றுதான்

இந்த முடிவுக்கு வந்தேன். என் நம்பிக்கை வீண் போகவில்லை. நாடு விடுதலை பெற இறைவனை வேண்டி, அவன் பாதத் திருவடிகளைத் தேடி யாத்திரை செய்கிறேன்.

அன்பன்,
நாராயணசாமி.''

கோபால்சாமியின் கண்கள் கண்ணீரைப் பெருக்கின.

* * *

கோவிந்தன் கதையை முடித்துவிட்டு, ''அந்தக் கோபாலசாமியின் பேரன்தான் கோபால். அந்தக் கோபாலசாமி பணத்தைப் பெரிதாக மதித்திருந்தால் உன்னிடம் இருக்கும் பணம் இப்போது அவனிடம் இருந்திருக்கும்!'' என்று கூறினான்.

''எங்கள் தாத்தா நாராயணசாமியையா நீ இப்போது குறிப்பிட்டாய்?''

''ஆமாம்.''

விநாயகம் ஓடிப்போய் கோபாலை இறுகத் தழுவிக்கொண்டு, ''என்னை மன்னித்துவிடு! நீயே காப்பானாக இருக்க வேண்டும்!'' என்று உள்ளம் உருகக் கூறிக் கேட்டுக் கொண்டான்.

அக்கரைச் சீமையில் பிரிந்த நண்பர்களின் உறவு அவர்களுடைய பேரன்கள் காலத்தில் மீண்டும் வலுப்பட்டது.

மோட்டார் கார்!

பாம்! பாம்! மோட்டார் கார்!
பாதை மேலே மோட்டார் கார்!
'ஜாம் ஜாம்' மோட்டார் கார்!
சவாரிக் கேற்ற மோட்டார் கார்!
'பாம்! பாம்!' மோட்டார் கார்!
பாதை மேலே மோட்டார் கார்! (1)

ஆடிப்போகும் மோட்டார் கார்;
'ஹாரன்' அடிக்கும் மோட்டார் கார்;
வேடிக்கையாய்ப் புகை பின்னே
விட்டுப் போகும் மோட்டார் கார்!
'பாம்! பாம்!' மோட்டார் கார்!
பாதை மேலே மோட்டார் கார்! (2)

முந்தத் தெரியா மோட்டார் கார்;
மூக்குடைஞ்ச மோட்டார் கார்;
பந்தம் எரியும் மோட்டார் கார்;
'பஞ்சர்' ஆகும் மோட்டார் கார்!
'பாம்! பாம்!' மோட்டார் கார்!
பாதை மேலே மோட்டார் கார்! (3)

நாளும் ஓட மோட்டார் கார்;
நாலுபேர் வேணும் மோட்டார் கார்;
தாளம் போடும் மோட்டார் கார்;
தகர டப்பா ஒட்டைக் கார்!
'பாம்! பாம்!' மோட்டார் கார்!
பாதை மேலே ஒட்டைக் கார்! (4)

—தமிழழகன்

211813
சென்னை-600 008

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் கிளைக் கழகம்

திண்டிவனம்
- உபதலைவர்: வி. ராஜேந்திரன்
- செயலாளர்: சாம்பசிவம்.
- பொருளாளர்: வி. ராதாகிருஷ்ணன்
- உதவி பொருளாளர்: முகம்மது அலி

செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. 'கலைவாணர் படிப்பகம்' என்ற பெயரில் நூல் நிலையமும் வாசகசாலையும் நடத்தப்படுகின்றன. படிப்பகத்தின் வளர்ச்சிக்கு புத்தகங்கள் உதவ விரும்புவோர், வி. ராதாகிருஷ்ணன், நெ. 1 - ராஜம்பேட்டை வீதி, திண்டிவனம் என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

உடன்குடி - கிறிஸ்டியாநகரம்
- உப தலைவர்கள்: S. பாலகிருஷ்ணன்; P. ஜயராஜ்
- செயலாளர்: பி. ராமநாதன்
- துணைச் செயலாளர்: எஸ். முருகன்
- பொருளாளர்: துரைராஜ்

பி. நடராஜனை ஆசிரியராகக் கொண்டு 'தாமரை' என்ற கயெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது. வாரந்தோறும் சிறுவர் லக்கியக் கூட்டம் நடத்தப்படுகிறது. பத்திரிகைக்கு விஷயங்கள் னுப்பும் விலாசம்: எஸ் பாலகிருஷ்ணன், c/o தீபம் நடராஜன், 235, ஜார் வீதி, கிறிஸ்டியாநகரம்.

கண்டி (இலங்கை)
- உபதலைவர்: கு. ஈழக்குமார்
- செயலாளர்: நஹீம்
- பொருளாளர்: மு. குமாரவேல்

ஐந்து பேர்கள் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 'கலையம்பு' என்ற கையெழுத்துப் பத்திரிகை (மாதம் ஒரு முறை) நடத்தப்படுகிறது. நண்பர்கள் எழுத்தோவியங்களை கு. ஈழக்குமார், 37/47, தெய்யன்னவெல, கண்டி என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

பேனு நண்பர்கள்

1. வ. பாண்டுரங்கன், c/o ரா. வரதராஜ முதலியார், 30, ஜவாஹர்லால் வீதி, குடியாத்தம். (வ ஆ)
2. எஸ். நாகராஜன், 6, மேலக்கிரகாரம், திருப்பத்தூர் (வ ஆ)
3. ஏ. கௌவுஸ் மைதீன், 37 ஜின்னு வீதி, ஈரோடு.
4. டி. புவனேந்திரன், 6 மல்லினுர் சந்து, பீளைமேடு, கோயம் புத்தூர் ஜில்லா.
5. ச. பஷீர் அஹமது, c/o ப. சுல்தான் ராவுத்தர், 16, ஹாபீஸ் பேட்டை, கோயம்புத்தூர்.
6. ஈ. லட்சுமணன், பொட்டலூரணி, எல்லை நாய்க்கன்பட்டி போஸ்டு, திருநெல்வேலி ஜில்லா.
7. மா. சேனுதிராசா, 'லீலா வாசம்', கோண்டாவில் கிழக்கு, யாழ்ப்பாணம், இலங்கை.
8. ஸி. பிரான்சிஸ், 3, ஆஸ்பத்திரிச் சந்து, கண்டி, இலங்கை.
9. ஏ. ஜே. முகம்மது நிதார், 1021, கல்பொக்கை, வெலிகாமம், இலங்கை.
10. எஸ். எம். சித்தீக், 338, கண்டி ரோடு, குருநாகல், இலங்கை.
11. எஸ். ஏ. கேசவன் கு. கழுகாசலபுரம், குறுமலை அஞ்சல், கடம்பூர் (வழி), நெல்லை ஜில்லா.
12. எஸ். பி. அமீர், 7, சின்னபள்ளி வாசல் தெரு, விருதுநகர்.
13. எஸ். பீர்முகம்மது, 39, கொழும்பு வீதி, கண்டி, இலங்கை.
14. எஸ். நடேசன், பெ. வீ. ராமலிங்கம், அரசினர் சிரேட்ட ாடசாலை, கலஹா, இலங்கை,

(Regd. as a Newspaper in Ceylon.) Regd. No. M

கண்ணன் வெளியீடுகள்

தங்க மாம்பழம் - 'ராஜி' ரூ.

ஒரு சிறுவனும் சிறுமியும் ஒரு மந்திரவாதக் கிழ வீட்டில் சிறைப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் கையில ஒரு தங்க மாம்பழம் கிடைக்கிறது. சிறையிலிருந்து தப்பி, கல்லறைத் தீவுக்குச் செல்ல முயல்கிறார்கள். கிழவியும் வீரப்பதேவன் என்பவனும் இதைத் தடுக்கிறார்கள். ஆனால் குழந்தைகள் இருவரும் மந்திரக் குதிரைமீது ஏறி மேலே பறந்து செல்கிறார்கள். சிறைக் கூண்டு கற்கண்டுக் கூண்டாக மாறுகிறது. பல திடுக்கிடும் சம்பவங்கள் கொண்ட அதிசய மான கதை.

சைனு கு-கூ! - ஆர்வி ரூ. 1.

பிளாட்பாரத்திலே பத்திரிகைகளைச் சுமந்து விற்ற பையன், குடிசையிலே அநாதையாக வளர்ந்த பையன், ஒரு நாள் திடீரென்று பெரிய கோடீசுவரருடைய உயிரைக் காப் பாற்றப்போய், அவனே கோடீசுவரனாகவும் ஆகிறான். ஆனால் பிச்சைக்காரன் பிரபுவாக விளங்குவது அத்தனை உல்லாசமாக இருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் அவன் அநுபவம் கூறுகிறது. அவனுடைய உயிருக்கே ஆபத்து நேருகிறது. 'சைனு கு-கூ!' என்ற மர்மப் பை ஒன்றும் மற்றும் பல மர்மங்களும் அடங்கிய இந்தக் கதை முதலிலிருந்து கடைசிவரையில் சுவாரஸ்யமாகவும் விறு விறுப்போடும் செல்கிறது. ஆயிரக்கணக்கான குழந்தை கள் விடாமல் விரும்பிப் படித்த அருமையான கதை. நடு நடுவே அழகான படங்கள்.

மஞ்சள் பங்களா - ஜி. ஜயராமன் ரூ. 1

சதிகாரர்களிடையே இரண்டு சிறுவர்கள் அகப்பட்டுக் கொள்கிறார்கள். அவர்களைச் சிறைப் பிடித்துக் கொல்லவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் இரண்டு சிறுவர் களும் புத்தி வன்மையினாலும் சாத்தியத்தினாலும் சதி காரர்களைக் கண்டுபிடித்து, காரியத்தையும் சாதித்துக் கொள்கிறார்கள். கடைசி வரி வரையில் விறுவிறுப்பும் பிர மிப்பும் உண்டாக்குகிற கதை.

புலிக்குட்டி - சித்திரக் கதை - ஆர்வி: ஸாமி ந. பைசா

அரசனிடம் விரோதம் கொண்ட வீரன் அரசன் மகனைத் தூக்கிச் சென்று வளர்த்து, அரசன்மீதே பகைமை பாராட் டும்படிச் செய்கிறான். புலிக்குட்டி என்றால் நாடே கலங் கிறது. கண்ணனில் தொடர்ச்சியாக வெளிவந்த அருமை யான சித்திரக் கதை.

சந்தாதாரர்களுக்குக் கமிஷன் உண்டு.

கலைமகள் காரியாலயம், சென்னை-4.